# விடுதலைப்புலிகள்

குரல்: 39 | வைகாசி - 1993 | அன்பளிப்பு : ரூபா 5/-


# தலைமை இழந்த நிலையில் சிங்களப் பேரினவாதம்

## தளர்ந்த நிலையில் சிறீலங்காவின் அரசியல் உறுதிப்பாடு

சிங்கள தேசத்து அரசியல் அரங்கில் பூகம்பமான விளைவுகளைக் கொடுத்த மூன்று பெரும் அரசியல் நிகழ்ச்சிகள் சமீபத்தில் நடந்து முடிந்துவிட்டன.

ஒன்று, எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி சுட்டுக்கொல்லப் பட்டது.

இரண்டு, ஜனாதிபதி பிரேமதாசா தற்கொலைக் குண்டுத்தாக்குதல்மூலம் கொல்லப்பட்டது.

மூன்று, மாகாண சபைத் தேர்தல் முடிவுகள்.

மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் ஆரம்பத்தில் எதிர்க் கட்சிகளை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருந்தன. ஆனால் எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்ற மூன்று மாகாண சபைகளுள் இரண்டில்,ஐ. தே. கட்சி தனது ஆட்களை முதல்வர்களாக நியமித்துவிட்டது. இந்த ஜனநாயக விரோதச் செயலால், இப்போது எதிர்க்கட்சிகள் ஏமாற்றமும் வெறுப்புமடைந்துள்ளன. இதன் விளைவாக அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் ஒரு நெருக்கடி நிலை எழுந்துள்ளது.

அதேவேளை, சிங்களப் பேரினவாதத்திற்கு உறுதியான தலைமை கொடுத்தபடி, சிறீலங்காவின் அரசியல் களத்தில் எதிரும் புதிருமாக இருந்த இரண்டு தலைவர்கள், கொல்லப்பட்டுவிட்டார்கள்.

இதனால், சிங்கள தேசம் உறுதியானஒரு தேசியத் தலைமை இல்லாது திண்டாடுகின்றது. இதன்காரணமாக கொழும்பு அரசியல் பெரும் குழப்பங்களைச் சந்தித்துள்ளது. இந்த யதார்த்த நிலையானது தென் இலங்கை அரசைப் பல வீனப்படுத்தியுள்ளது. இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து, சிறீலங்கா அரசியலின் ஸ்திரத் தன்மையைப் பெருமளவு சீர்குலைத்துவிட்டன. அத்துடன் சிங்கள தேசத்தின் அரசியல் எதிர்காலமும் இன்று கேள்விக்குரியதாக மாறிவிட்டது.

கொழும்பில் ஸ்திரமற்ற ஒரு அரசியற் போக்கும், திறமையும் ஆளுமையும் அற்ற ஒரு அரசியற் தலைமை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பதும், சிங்களப் படைமீதும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இதுவரைகாலமும் உறுதியான ஒரு அரசியல் தலைமையின் உந்துதலாலும், ஆதரவுடனும் போர்புரிந்த சிங்களப் படைகள் இன்று, அந்த உந்து சக்தியை இழந்துவிட்டன. இதனால் படையினரின் உறுதித் தன்மையும் போரிடும் வேட்கையும் பாதிப்படைந்துள்ளன எனலாம்.

இதேவேளை, புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள டி. பி. விஜேதுங்கா தமிழர்களின் தேசிய இனப்

-->

## உள்ளே...


- சிங்கள தேசத்தை உலுக்கிய அரசியல் படுகொலைகள்
- பிரேமதாசாவின் உண்மை முகம்
- இரண்டாவது பனிப்போர்
- அழியாதோர் ஆகினீர்!
- புதைந்து கிடக்கும் உண்மைகள்
- தளபதி கிட்டு அவர்களின் நினைவாக லண்டனில் இசைக்கப்பட்ட கவிதை
- லெப்ரினன்ற் சின்னா
- அழியாத ஒன்று






தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

# புதிய சனாதிபதியும் இனச்சிக்கலுக்கான தீர்வும்

புதிய சனாதிபதி டி. பி. விஜேதுங்கா மென்போக்கானவர். இனச்சிக்கலைத் தீர்த்து வைப்பார் என பரவலாகப் பேசப் படுகின்றது.

டி. எஸ், டட்லி, சிறிமாவோ, ஜே. ஆர். பிரேமதாசா இப்படி அவர் பரவாயில்லை இவர் பரவாயில்லை என்றே தொடர்ந்த வரிசையில், தற்போது டி. பி. விஜேதுங்கா சேர்ந்துள்ளார்.

பிரேமதாசாவை பெரும்பாலோர் நம்பிக்கையுடன் பார்த்தனர். இனச்சிக்கலைத் தீர்க்கவந்த சிங்களத்தலைவர் என அவரை மக்களில் பலர் நம்பினர்.

தான் நினைத்ததைச் செயற்படுத்தும் ஆற்றல் பிரேமதாசாவுக்கு இருந்தது. இந்தியப் படைகளை வெளியேற்ற நினைத்தபோது, விடுதலைப் புலிகளை நிபந்தனையின்றிப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

ஆயுதங்களுடன், சீருடையுடனும் விடுதலைப் புலிகள் கொழும்பில் சனாதிபதியுடன் பேசினர். "போராடுபவர்களிடம் ஆயுதங்களைக் கேட்பதைப்போல் முட்டாள்தனம் கிடையாது" எனப் பிரேமதாசா இந்திய அரசுக்கு புத்தி கூறினார்.

இப்படியான சாதாரணமற்ற முறையில் பெரும் துணிச்சலோடு முடிவுகளை எடுக்கும் ஆற்றல் படைத்த பிரேமதாசா கூட, இனச்சிக்கலுக்குத் தீர்வு எதையும் வைக்கவில்லை.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து, மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களையும் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய சனாதிபதிக்கு, பேச்சுவார்த்தையின்மூலம் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணும் தம் எண்ணத்தைத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இனச்சிக்கலுக்கான தீர்வானது ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

## புலிகளின் குரல்

16.5.93 ஒப்சேவர் செய்தித்தாளுக்கு புதிய சனாதிபதி அவர்களால் தரப்பட்ட நேர்காணலில் கூறப்பட்ட விடயங்கள், நம்பிக்கை தருபவையாக இல்லை.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் அமைந்துள்ள அந்த நேர்காணலில், பேச்சுவார்த்தைமூலம் தீர்வு காண தாம் ஆயத்தமாக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, நாடானது "ஒற்றையாட்சியின் கீழ் ஒன்றாக இருக்கவேண்டும்" எனக் கூறியுள்ளார். "இங்கு இனச்சிக்கல் என்பது கிடையாது. எல்லா இடங்களிலும் தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக இருக்கிறார்கள்; ஒன்றாக வேலை செய்கின்றார்கள். நாட்டின் ஒரு பகுதியில் மட்டும் இனச்சிக்கல் இருப்பதாகக் கூறுகின்றார்கள். நான் சொல்கிறேன், அங்கு இருப்பது இனச்சிக்கலல்ல; பயங்கரவாத முரண்பாடு" எனவும் கூறியுள்ளார்.

"நீங்கள் தீர்வுத் திட்டம் ஒன்று வைக்கவில்லையா" எனக் கேட்டதற்கு, "அவர்கள் தீர்வு கேட்டு ஒரு திட்டத்துடன் வரவேண்டும். அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் கேட்காத ஒன்றை எப்படி வைக்க முடியும்" எனவும் கேட்டுள்ளார்.

வழமையாகக் கேட்கும் சிங்களப் பேரினவாதத்தின் குரல்தான். புதிதாக அவர் எதையும் கூறவில்லை.

டி. பி. விஜேதுங்கா, பிரேமதாசா போன்று பலமான அடித்தளத்தைக் கொண்ட தலைவர் அல்ல. அத்துடன் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆவார்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் முடிவுகள், அடுத்த சனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதில் சனாதிபதி வேட்பாளருக்கு உள்ள சிக்கலைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணக்கூடிய நிலையில் சிறீலங்காவில் யாருமில்லை. தம் நலனைப் பாராது இத்தீவின் நீண்ட நாளைய நலனைக் கருத்திற்கொண்டு துணிவுடன் முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய ஒரு சிங்களத் தலைவரை, தற்போது சிறீலங்காவில் எம்மால் காணமுடியாமல் இருப்பது சோகமானதே.

ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்டு தீர்வை முன்வைக்க நினைப்பவர்கள் அடுத்த தேர்தலில் வெல்ல முடியுமா? அம்முடிவை எடுத்தபின் வாழமுடியுமா? என்பதே, இன்றுள்ள கேள்விகளாகும்.

சிங்களப் பேரினவாத அரசின் ஆட்சியாளரால் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாண முடியாது என்பதே, நாம் எமது 45 ஆண்டு கால வரலாற்றில் கண்ட உண்மையாகும்.

இவர்களின் தொடரும் பேச்சுக்களும் நடவடிக்கைகளும், சிங்களப் பேரின அரசை தமிழீழ படைக்கலன்களால் மட்டுமே தகர்க்க முடியும் என்ற தமிழீழ மக்களின் நம்பிக்கையை, மீண்டும் மீண்டும் உறுதிசெய்கின்றன.

டி. பி. விஜேதுங்காவின் இடத்தில் கௌதம புத்தரே இருந்தாலும் அவருக்கும் சிங்களப் படைகளின் பாசறைகளுக்குச் சென்று இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆசீர்வாதம் செய்வதைத் தவிர.வேறு வழியிருக்காது. ○

## தலைமை இழந்த நிலையில்..

பிரச்சினை தொடர்பாக, குழப்பமானதும் சிறுபிள்ளைத்தனமானதுமான கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

ஆழமான வடுக்களையும், சிக்கலான அரசியல் பரிமாணங்களையும் கொண்ட இனப்பிரச்சினையையிட்டு, ஒரு தெளிவான பார்வையோ அல்லது பெருமளவில் இரத்தம் சிந்தப்படும் இந்த இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற ஆர்வமோ, புதிய ஜனாதிபதியிடம் சிறிதளவுகூட இருப்பதாகத் தெரியவில்லை.

பதிலாக தமிழரின் உரிமைப் போராட்டத்தை "பயங்கரவாதம்" என்றும், புலிகள் ஆயுதங்களைப் போடவேண்டும் என்றும், புளித்துப்போன – யதார்த்தத்திற்குப் புறம்பான – கருத்துக்களைக் கூறி, சமரசப்பேச்சுக்கான சூழலை புதிய ஜனாதிபதி இல்லாமல் செய்கின்றார்.

பதவி ஏற்றதும் "பிரேமதாசாவின் கொள்கைகளைத் தொடருவேன்" என்று புதிய ஜனாதிபதி அறிவித்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாக பிரேமதாசாவிடமும் ஒரு தெளிவான கொள்கை இருந்ததில்லை.

உண்மையில், இனப்பிரச்சினையை இழுத்தடிப்பது என்பதுதான் பிரேமதாசாவின் கொள்கையாக இருந்தது. அத்துடன், தமிழரின் தாயகத்தைத் துண்டாட வேண்டும் என்ற வெறியும் அவரிடம் இருந்தது. அதேவேளை இராணுவ பலம் கொண்டு தமிழர்களைத் தோற்கடித்து, இலங்கைத் தீவு முழுவதையும் சிங்களவர்களுக்கே சொந்தமான பூமியாக மாற்ற வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதத்தின் இலட்சியம் தான், பிரேமதாசாவின் கொள்கையாகவும் இருந்தது.

பிரேமதாசாவின் இக் கொள்கையையா புதிய ஜனாதிபதியும் பின்பற்றப்போகிறார்?

இந்தச் சூழ்நிலையில், புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல்ரீதியான தீர்வு ஏற்படுமா என்பது, ஒரு பெரிய கேள்விக்குறியாக எழுந்துள்ளது. ○

## இன்னலைத் தரும் இந்தியா

இன்னலில் வாழ்ந்த எம்மினம் – சிலர்
பின்னிய வலையிலும் விழ்ந்தனர்.
இந்தியன் போர்வையை நம்பினர்,
இன்றோ அவன் சதி புரிந்தனர்!

அறிஞர்கள், அறிவாளர் இருந்தனர் – அவன்
அடிப்படை புரியாது நடந்தனர்.
விடுதலை வேண்டித் துடிக்கையில் – சிலர்
விழுந்தனர் அவனது வலையினில்!

தனக்குள் நோக்கம் வைத்துத்தான் – ஈழ
தமிழர்கள் நிலையினை முழங்கினான்.
கட்டிய கற்பனை உடைந்ததால்
முட்டியே மோதவும் துணிந்திட்டான்!

வல்லையில் பிறந்தவன் வலிமையால் – இங்கு
வாலாட்ட முடியாமல் ஒதுங்கிவிட்டான்.
வஞ்சம் தீர்க்கும் நோக்கத்தில்
வங்கக் கடலிலே அலைகிறான்!

— இ. ஜே. விஜயக்கோன்

www.eelamview.com

# சிங்கள தேசத்தை உலுக்கிய அரசியல் படுகொலைகள்

## தங்களது அதிகாரத்தின் கீழ் - பத்தாண்டு காலத்திற்குள் - 30, 000 தமிழர்களைக் கொன்ற இரு பெரும் சிங்களத் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் காவற்தெய்வங்களாக விளங்கிய திரு. லலித் அத்துலத் முதலியும், திரு. பிரேமதாசா அவர்களும் ஒன்பது நாட்கள் இடைவெளிக்குள் அடுத்தடுத்துப் படுகொலை செய்யப்பட்டுவிட்டனர்.

இந்த இருபெரும் அரசியல் தலைவர்களது மரணத்துடனும், சிறீலங்கா அரசியலில் இப்படுகொலைகள் ஏற்படுத்திய சர்ச்சைகள் - தாக்கங்களுடனும் சிங்கள தேசத்தின் அரசியல் ஸ்திரமும் கேள்விக்குரியதாக மாறிவிட்டது.

மாகாண சபைத் தேர்தலுக்காக கிருலப்பனையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில்வைத்து,ஏப்ரில் 23ஆம்திகதி இரவு8.45 மணிக்கு லலித் சுடப்பட்டார். அவர் மேடையில் ஏழுநிமிடங்கள் பேசியபின், அவருக்கு முன்னால் சுமார் 10 அல்லது 15 அடி தூரத்தில் மேடைக்கு அருகே வந்த துப்பாக்கி இளைஞன் ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



**வெளிப்பார்வைக்குச் சமாதானப் பிரியரைப் போலவும். பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை உள்ளவர் போலவும் தன்னைக் காட்டிக்கொண்ட பிரேமதாசா, தமிழர் இனப் பிரச்சினைக்கு வைத்திருந்த தீர்வு, இராணுவ பலம் கொண்டு அவர்களை நசுக்குவதுதான். எல்லா வகையாலும் அழிவுகளையும் அவலங்களையும் தமிழர்கள் என்றுமில்லாதவாறு சந்தித்தது, பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில்தான்.**

அத்துலத் முதலியின் கொலைக்கு அரசே காரணம் என, உடனேயே ஜ. ஐ. தே. மு. கட்சி அறிக்கையும் விட்டது. பெரும்பாலான சிங்கள மக்களின் கருத்தும், ஏன் உலகினதும் முடிந்த முடிவும் அதுதான்.

பிரேமதாசாவின் முதல்தர அரசியல் எதிரியாகவும், பிரேமாவின் அதி உயர் பதவியைப் பறிக்கக்கூடிய ஆளுமையும் அரசியல் செல்வாக்கும் பெற்றவராகவும் லலித் வளர்ந்துவந்தார். அதனால் பிரேமதாசா தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள லலித்தைக் கொலைசெய்தார் என்ற அபிப்பிராயம், பரவலாகக் குடிகொண்டிருக்கிறது.

இந்த அபிப்பிராயம் வெறும் ஊகங்களின் அடிப்படையில் எழுந்த வதந்திகள் அல்ல. பிரேமதாசாவின் இரத்தக்கறை படிந்த அரசியல் வாழ்வுக்கு சிங்கள மக்கள் பல ஆதாரங்களை வைத்திருக்கின்றனர். பிரேமதாசாவின் அரசியல் வாழ்வு- அண்மைக்காலத்தில் - கொலைகளாலும், சண்டித்தனங்களாலும், கழுத்தறுப்புகளாலும் தான் வளர்த்துச் செல்லப்பட்டதாக அவரின் எதிரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

அரசியல் எதிரிகளை அழிப்பதன்மூலம் எதிர்ப்புகளை வெற்றிகொள்ள விழையும் ஒரு அரசியல் மரபை, சிங்கள தேசத்து அரசியல் அரங்கில் சிருஷ்டித்துவிட்டவர் பிரேமதாசாதான் என்றால், அது மிகையாகாது.

அடாவடித்தனம்கொண்ட இந்த அரசியல் மரபு, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தால் திடீர் வளர்ச்சியைக்கண்ட ஜே.வி.பி யின் கிளர்ச்சியை ஒடுக்குவதில் உச்சம் கண்டது. அன்றிலிருந்து பிரேமதாசா தான்இறக்கும்வரை,தனது அரசியல் எதிரிகளது வாழ்வை கனகச்சிதமாக முடித்து, தன்னுடைய அரசியல் அடித்தளத்தைப் பலமாக்க முயன்றுவந்தார்.

இத்தகையதொரு யதார்த்த நிலையிலிருந்து தான் லலித்தின் கொலைக்கு பிரேமதாசா குற்றம்சாட்டப்பட்டார். எதிர்க்கட்சிகளதும், பத்திரிகைகளினதும் ஏகோபித்த கண்டனக் கணைகளால் நிலைகுலைந்த பிரேமா,

**"......நான் மனிதர்களுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கே தீங்கிழைக்காதவன்"** என்று, எவருமே ஏற்கத்தயாரில்லாத புலம்பலைச் செய்து தப்பிக்க முயன்றும், அவர் மே 1 ஆம் திகதி நண்பகல் கோரமான வடிவில் சாவைத் தழுவுகின்றார்.

கொழும்பில் மேதின ஊர்வலத்தில் குதூகலமாகச் சென்றுகொண்டிருந்தபோது, ஆமர் வீதிச் சந்திக்கு அருகாமையில், குண்டுவெடிப்பொன்றின் மூலம் பிரேமதாசா கொல்லப்படுகின்றார். அது ஒரு மனிதக் குண்டு ஆகும்.

இவ்விரு படுகொலைகளுக்கும் புலிகள் இயக்கத்தைச் சம்பந்தப்படுத்தி சிங்கள பொலிஸ் துறை குற்றம் சுமத்தியுள்ளது. ஆனால் சுயாதீன பத்திரிகைகளும், வெளிநாட்டுச் செய்தியாளர்களும் இப் படுகொலைகளை சிங்கள தேசத்தின் உள் பிரச்சினைகளாகவும், பழிவாங்கும் படலமாகவுமே சித்திரிக்கின்றனர்.

இந்த இரு சிங்களத் தலைவர்களது படுகொலைகளின் பின்னணிகள்பற்றிய ஆழமான விசாரணைகள், ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும், இந்த இரு மனிதர்களும் தமிழ்மக்கள்மீதான போரில் எத்தகைய பாத்திரத்தை வகித்தார்கள் என்ற விபரங்களை மீட்டுப் பார்ப்பது அவசியம்.

1977 ஆம் ஆண்டு சிங்களக் காடையர்களின் இனவெறித் தாக்குதல்களுக்கு இலக்காகியபடி வெறுங்கையுடன் நின்ற தமிழர்களைப் பார்த்து, "போரா?சமாதானமா?" எனத்திமிருடன்கேட்ட முதுபெரும் இனவெறியன் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பேரினவாதப்பட்டறையில் உருவாக்கப்பட்ட, கொடிய மனிதர்களே இந்த இரண்டு பேருமாகும்.

தமிழ்மக்களைக் 'கொன்றுகுவித்து-வேட்டையாடி அவர்களின் சொந்த இருப்பிடங்களிலிருந்து விரட்டியடித்து இனப்படுகொலை புரிவதில் இருவருமே ஒத்த கருத்துடையவர்களாகவும், அதைச் செயற்படுத்துவதில் அதிதீவிரம் காட்டுபவர்களாகவும் இருந்துள்ளனர்.

ஆனாலும், ஜே. ஆரின் பாணியில் முரட்டுத்தனமாக தனது தமிழின விரோதச் செயல்களுக்கு அத்துலத்முதலி விளக்கமளிப்பதைப் போல, பிரேமதாசா நடப்பதில்லை.

ஏதும் அறியாத ஒரு அப்பாவிபோல-காருண்யம்மிக்க ஒரு கனவானைப்போல - வெளியில் கதைத்து அறிக்கைகளை விடுத்துக்கொண்டு, மறுபுறத்தில் மிகத்தீவிரமாகவும் கச்சிதமாகவும் தமிழின அழிப்பில் அவர் ஈடுபட்டுவந்துள்ளார்.

இவ்விருவரினதும் அதிகாரத்துக்குள் தமிழர்களின் உயிர்களும் உடைமைகளும் கொண்டுவரப்பட்ட கடந்த 10 ஆண்டுகளிலும், சுமார் 30,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஏற்ற திரு. அத்துலத்முதலி, தமிழினத்தைப்பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் இராணுவத்தை நவீனப்படுத்திவிட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவ அட்டூழியத்தை தமிழ்மக்கள்மீது ஏவிவிட்டார்.


மணலாறு, திருக்கோணமலை, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல தமிழர் கிராமங்களைச் சில மணிப்பொழுதுக்குள் துடைத்தெறிந்து தமிழர்களை விரட்டும்படி, லலித் இராணுவத்திற்கு உத்தரவு வழங்கியிருந்தார் அதேவேளை தமிழீழம் எங்கும் சுற்றிவளைப்புகள், கைதுகள்மூலம் தமிழ் இளைஞர்களை வேட்டையாடும்படியும் இராணுவத்தைப் பணித்தார்.

இதனால் பல அப்பாவிக் கிராமவாசிகள் கொல்லப்பட்டனர்; அகதிகளாக இடம் பெயர்ந்தோர் ஏராளம்.

பூசா வதை முகாங்களும், தடுப்பு முகாங்களும், தமிழ் இளைஞர்களின் இருப்பிடங்களாகின.

புதிய புதிய சித்திரவதை வடிவங்கள் தமிழர்கள்மீது பிரயோகிக்கப்பட்டன.

அதேவேளை, பொதுமக்களையும் அவர்களது சொத்துக்களையும் அழிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்ட பீப்பாய்க் குண்டுகளின் சூத்திரதாரியும் அத்துலத்முதலியேயாகும்.



**1984 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவி ஏற்று, தமிழினத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் சிங்களப் படையை நவீனப்படுத்திவிட்டு - ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவ அட்டூழியத்தைத் தமிழ் மக்கள்மீது ஏவிவிட்ட அத்துலத்முதலி சாகும்வரை, புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார்.**

பீப்பாய்க் குண்டுகள் சிலவற்றுடன் ஒரு அவ்ரோ விமானத்தில் பறந்துவந்த லலித், யாழ்நகர் மீதான ஒரு பீப்பாய்க் குண்டுவீச்சை நெறிப்படுத்தியிருந்தார். இக்குண்டுகளில் ஒன்று யாழ். வைத்தீஸ்வரன் கோவிலில் மாலைநேர பூசையில் ஈடுபட்டிருந்த பக்தர்கள்மீது வீழ்ந்து வெடித்தது. அதில் 10 பேர் உடல்சிதறிப் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இதே போன்ற பாரிய உயிர் - பொருள் இழப்புகள் ஏற்படும் என்று உலக நாடுகள் எச்சரித்திருந்தும், வடமராட்சிமீதான படையெடுப்பை நடாத்த லலித் தீர்மானித்தார். அந்த இராணுவ நடவடிக்கையில் - ஒப்பறேசன் லிபறேசன்-100 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். கோடிக்கணக்கான ரூபா பெறுமானமுள்ளசொத்துக்களும் அழிக்கப்பட்டன. அத்துடன் வடமராட்சியின் பெரும்பான்மை மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தனர்.

இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, இந்திய - இலங்கை ஒப்பந்த விதிகளுக்கு முரணாக புலிகளின் மூத்த தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிருவரைக் கைது செய்ததுடன் அவர்களது சாவுக்கும் நேரடிக் காரணியாக அத்துலத்முதலியே இருந்தார்.

கைதுசெய்யப்பட்ட புலிகளின் தளபதிகளைக் கொழும்புக்குக் கொண்டுவராவிட்டால்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com



ஏர்பிடித்து,
ஏற்றக் கொடிபிடித்து,
இங்குள்ள
ஊர்வாய்க்கு எல்லாம்
உணவளித்து விட்ட பின்பே
நின்வாய்க்கு உணவளிக்கும்
நிலமகனே!
மண்மக்கள் வாழுகின்ற, மண்
பகைவன் காலடியில்,
எந்நாளும் போகாது இருக்கும்.
இது உறுதி.
பெட்டிக்குள் என்ன புட்டா?
பழஞ்சோறா?
முட்டுப்பட்டோருக்கு
முழு உணவு ஏதய்யா?
எருதுகளின் நிழலில்
இளைப்பாறும் பெருமனிதா!
விருதுனக்குத் தருவதற்கு
விடியும் ஒரு பொழுது.

- புதுவை இரத்தினதுரை ○

## சிங்கள தேசத்தை...

தான் இராஜின்மா செய்யப்போவதாக லலித் கூறியிருந்தார் என, ஜே. ஆர். தெரிவித்திருந்தார்.

இந்தச் சம்பவத்தைப்பற்றி 2.5 93ஆம் திகதிய 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையில் ஒரு சிறுகுறிப்புள்ளது.

அக்கட்டுரையாளர் எழுதுகின்றார்:

"... இப்படி நடக்குமென்று [கொழும்புக்கு எடுத்துவர முயன்றால் அவர்கள் சயனைட் அருந்திச் சாவார்கள்] ஏற்கெனவே நீங்கள் ஊகித்துணர்ந்திருக்க வேண்டுமே என லலித்தைக் கேட்டேன்; உடனடியாக லலித் பதிலளித்தார். **'எது நடக்கவேண்டுமென்று நான் விரும்பினேனோ அதுதான் நடந்தது' என்றார்."**

அதாவது, புலிகளின் ஒப்பற்ற தளபதிகளை லலித் எவ்விதம் திட்டமிட்டு மரணப் பொறிக்குள் கொண்டு சென்றார் என்பதை, இது காட்டுகின்றது

லலித்தின் பதவி ஆசைக்குக் குறுக்கே பிரேமதாசா தான் நின்றார். பிரேமாவை வீழ்த்துவதில் குறியாக இருந்த அதேவேளை, புலிகள் அழிக்கப்படவேண்டும் என்பதிலேயே லலித் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

கொல்லப்படுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு தனது கட்சிக் கூட்டமொன்றில் லலித் கூறினார்:

**"..... நாங்கள் இப்போதுயானையைத்தான் குறிவைத்துள்ளோம். அது விழப்போவது உறுதி; அதே நேரத்தில் புலி தப்பிவிடக்கூடாது நாம் ஆழமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்."**

லலித்தின் படுகொலைக்குப் பின்னர் ஒரு கொடூரமான மனிதனாக பிரேமதாசா சிங்கள மக்களுக்குத் தெரிந்தார். அந்த உணர்வு சிங்கள மக்களை ஆழமாக ஊடுருவிக் கொண்டிருந்த போதே பிரேமதாசாவும் கொல்லப்படுகின்றார். இதனால் பிரேமதாசாவின் கொலையையிட்டு சிங்கள மக்கள் பெரிதாக அதிர்ச்சியடையவில்லை; எவர்மீதும் ஆத்திரப்படவுமில்லை. எல்லாம் கர்மவினைப்படி நடக்கின்றது என்றுவிட்டு, அமைதியாக இருந்துவிட்டார்கள்.

திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்றபின் ஜே வி பி யின் கிளர்ச்சியை ஒடுக்குகின்றேன் என்று கூறிக்கொண்டு, தனது அரசியல் எதிரிகள் - அதிருப்தியாளர்கள் - என்று, சிங்கள இனத்தில் 60,000 மக்களைக் கொன்று குவிக்க உத்தரவு வழங்கியவர் என்பது, அனைவரும் அறிந்த கதை.

அதேவேளை, ஜே. ஆர். தீவிரப்படுத்திய தமிழின அழிப்பு வேலையை பிரேமதாசா கச்சிதமாகத் தொடர்ந்து செய்தபடி இருந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக, இரக்கமின்றித் தமிழ்மக்கள்மீது போரைத் தொடர்ந்து நடாத்திவந்தார். உணவுத்தடை மருந்துத் தடை, எரிபொருள்தடை, உற்பத்தித்தடை, போக்குவரத்துத்தடை என்று ஒரு முழுமை பெற்ற பொருளாதாரத்தடையை தமிழர்கள் மேல் திணித்து, தமிழினத்தைக் கொடுமைப் படுத்தி வந்துள்ளார்.

இந்த மூன்றுவருடகாலத்திற்குள் பலதடவைகள், பல பொது அமைப்புகள், மனிதாபிமானத்தின் பெயரால் யுத்த நிறுத்தம் செய்யும்படியும் பொருளாதாரத்தடைகளை நீக்கும்படியும் விடுத்த வேண்டுகோள்களைப் பிரேமதாசா ஏற்றுக்கொள்ளவேயில்லை.

அதேவேளை, பகிரங்கமாகவும் நல்லெண்ணங்கொண்ட சில தனிநபர்கள்மூலமும் புலிகளின் தலைமைப்பீடம் பிரேமதாசாவுக்கு விடுத்த யுத்த நிறுத்தக் கோரிக்கைகளை, சமாதானசமிக்ஞைகளை பிரேமதாசா முற்றாக நிராகரித்தார். பதிலாக புதிய புதிய போர்விமானங்களை, அழிவைத்தேடும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து தமிழர்களுக்கு எதிரான போரை விரிவுபடுத்திக் கொண்டிருந்தார்.

பிரேமதாசாவின் இந்த மூன்றுவருட ஆட்சியில்தான் தமிழினம் என்றுமில்லாதவாறு துன்பங்களையும் - அழிவுகளையும் - அவலங்களையும் சந்தித்துள்ளது. குறிப்பாக தென்தமிழீழம் சந்தித்த உயிரிழப்பும் நில அபகரிப்பும் மற்றெல்லாக் காலங்களையும் விட மிக மோசமானதாகும்.

எல்லாச் சிங்களத் தலைவர்களையும் விட, இணைந்திருந்த வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு விடாமுயற்சி செய்தவர் பிரேமதாசாதான் என்பதை, சிங்கள மக்கள் இன்னமும் உணரவில்லை என, கொழும்பிலுள்ள ஒரு பத்திரிகையாளர் எழுதியிருந்தார்.

இதேபோன்றுதான், சாதாரண மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாத ஒரு மனிதனாகவே பிரேமதாசாவின் உண்மைத் தோற்றம் இருந்தது.

வெளிப்பார்வைக்கு சமாதானப் பிரியரைப் போலவும், பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையுள்ளவர் போலவும் ஒட்டுமொத்தத்தில் ஒரு மிதவாதிபோல தென்படும் அவர், உண்மையில் கொடுமையான ஒரு மனிதன்; அபாயம் நிறைந்த சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஒரு மறுபதிப்பு.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு பிரேமதாசாவிடமிருந்து ஒரு நீதியான தீர்வை எதிர்பார்க்க முடியாது.

இனப்பிரச்சினைக்கு பிரேமதாசா வைத்திருந்த தீர்வு, இராணுவ பலத்தின்மூலம் தமிழரின் தேசிய பலத்தைச் சிதைத்துவிட்டு தமிழர்களின் உரிமைக் கோரிக்கையை மழுங்கடித்து விடுவதுதான்.

பிரேமதாசாவின் பிரதான இலக்கு, கொழும்பில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்துவதும் பாதுகாப்பதும்தான். அதற்காக இந்தப்போரையும் அவர் நன்கு பயன்படுத்திவந்துள்ளார்.

சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு துட்டகைமுனுவைப்போலக் காட்டிக்கொள்ளவும் தன்னை அரசியலில் ஒரு உயர் நிலைக்கு வளர்த்துக்கொள்வதற்காகவும், என்றோ தான் அணிந்த இந்திய எதிர்ப்பு முகமூடியை இப்போது கழட்டி வைத்துவிட்டு, தனது அதிகாரத்தைப்பாதுகாத்துப் பராமரிக்கவும் தனது அரசியல் எதிரிகள் பலம் பெறாமல் தடுக்கும் நோக்குடனும் இந்திய ஆதரவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளார். அதன்மூலம் இந்திய அரசுடனான உறவைப் பலப்படுத்திக்கொண்டு தமிழர்கள்மீதான போரை மேலும் தீவிரப்படுத்தியுள்ளார்.

இவ்விதம் கடந்த 10 ஆண்டுகளாக தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிங்களப்படைகளுக்குத்தலைமை தாங்கிய இரண்டு சிங்களத் தலைவர்கள் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டமை, இந்த ஆண்டின் ஒரு முக்கியமான விடயமாகும்.

இவ்விருவரினதும் கொலைகள் இலங்கைத் தீவில் முக்கிய அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் என ஊகிக்கப்படுகின்றது. ○

## அன்றும் இன்றும்



மாலை கழிந்த கருக்கல் நேரம் வானில் பறந்த ஒருவகைக் குருவிகளைப் பார்த்து தாத்தா கூறினார்,

**"அந்தா... உழவாரக்குருவி !"**

"பார்வைக்கு 'உழவாரம்' போல இருப்பதாலேயே அதற்கு அப்பெயர்" என பேரப்பிள்ளைகளுக்கு விளக்கம் கொடுத்தார்.

அண்ணார்ந்தபடி அவர்கள் அவற்றைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சில நொடிகளின் பின் பேரப்பிள்ளைகளில் இளையவள் துள்ளிக்குதித்தாள்.

**" இல்லை, அது பொம்மர்குருவி"**

அந்தா ... குத்துது குத்துது கு...து ... ஊ

குழந்தையின் கற்பனையில் தாத்தாவும் மூழ்கின்றார்.

" இது புதுயுகம்; உவமைகளும் புதியனவாகத்தான் இருக்கும்" என அவரது பொக்குவாய் கூறிக்கொள்கிறது.

*(உண்மை நிகழ்விலிருந்து)* ○

# புதைந்துகிடக்கும் உண்மைகள்

## “வெற்றுடல்கள் அல்ல-இவைகள் வெடிமருந்துப் பொதிகள்”

**20. 04. 1993,**

மதியம் 12 மணி.

சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக றிபேர்க் கல்லூரியின் மதிற் கரையோரமாக, மின்கம்பம் நடுவதற்கு குழி வெட்டுகிறார்கள்.

சுமார் இரண்டு அடி ஆழம் சென்றிருக்கும் – அப்போது – அக்குழியினுள் கறுப்புநிற சட்டை தெரிகிறது.

தொழிலாளர்கள் மேலும் தொடர்கிறார்கள்.

அடுத்து ஓர் எலும்புக்கூட்டுடன் கூடிய தலை. தொடர்ந்து சிதைந்த கால் எலும்புகள், விலா எலும்புகள், கை எலும்புகள்.... பயத்துடன் காவல் துறையினரை நாடுகிறார்கள்.

உடன் காவல்துறையினர் குறித்த இடத்தை அடைகிறார்கள். அவர்களின் மேற்பார்வையில் மீண்டும் குழி வெட்டப்படுகிறது.

தொடர்ந்து ஆண்பிள்ளை ஒருவரின் எலும்புக்கூடு, அடுத்ததாக பெண்பிள்ளை உடுக்கக்கூடிய உடுப்புடன்கூடிய ஒரு பெரிய பிள்ளையின் எலும்புக்கூடு, அத்துடன் நீலக்காற் சட்டையுடன்கூடிய ஓர் ஆண் பிள்ளையின் எலும்புக்கூடு, அதன்பின் ஒரு பெரிய பெண் பிள்ளையின் எலும்புக்கூடு, உடுப்புடன் கூடிய ஒரு சிறு பிள்ளையின் எலும்புக்கூடு, பட்டு உடுப்புடன் ஒரு பெண்ணின் சிதைந்த மண்டையோட்டுடன்கூடிய எலும்புக்கூடு, இவற்றுடன் மதக்கடமைக்குப் பயன்படுத்தப்படும் நூல்கள், ஒரு ஒற்றைத்தோடு, ஒருசோடி டிஸ்கோத்தோடும் தூக்கணமும், ஒருசோடி வளையம், அதைத்தொடர்ந்து ஒரு பொட்டலம், அதில் பிள்ளையார் தாலியுடன் கூடிய மல்லிகை மொட்டுச்சங்கிலியொன்று, 2 பவுண் ஒரு மல்லிகைமொட்டு சங்கிலி, ஒரு மயில் மோதிரம், ஆண்களுக்குரிய பெட்டிமோதிரம் ஒன்று என்பன அக்குழியிலிருந்து கண்டெடுக்கப்படுகின்றன.

மீட்கப்பட்ட பொருட்கள் காவல்துறை பணிமனையில் ஒப்படைக்கப்படுகின்றன. காவல் துறை பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அவர்கள் ‘இக் கொலை எக்கால கட்டத்தில் யாரால் நடாத்தப்பட்டது என்றும், கொலை செய்யப்பட்டவர்கள் பெயர் விபரம் என்பன அடங்கிய பூரண விபரத்தையும் விரைவில் தரும்படி’ காவல் துறையினரைப் பணிக்கின்றார்.

அவரது பணிப்பை ஏற்று காவல்துறையினர் தங்கள் இலக்கை நோக்கி விசாரணையைத் தொடங்குகிறார்கள்.

இச் சம்பவத்தை அறிந்த முன்னாள் தென்மராட்சிப் பொறுப்பாளரும் தற்போதைய அரசியல்துறைப் பொறுப்பாளருமான திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள், ‘‘இந்திய இராணுவம் தென்மராட்சியில் பல படுகொலைகளைப் புரிந்துள்ளது. சிலவற்றை நாம் இனம் கண்டோம்; பலவற்றை இனம் காண முடியாமல் அவர்கள் மூடி மறைத்து விட்டார்கள். இந்த மனித எலும்புகளை தென் மராட்சியில் எடுப்பது இதுதான் முதல்தரமல்ல. இதற்கு முன்னும், இந்திய இராணுவம் எமது மண்ணைவிட்டுப் போன கால கட்டத்தில் சாவகச்சேரி பொதுச்சந்தையில், சில மனித எலும்புக்கூடுகளைக் கண்டெடுத்தோம். இப்போது இரண்டாவது தடவையாக சில எலும்புக்கூடுகளும் அவற்றுடன் சில பொருட்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன’’ என்கிறார்.

குடாநாட்டின் நாளேடுகள் தலைப்புச் செய்திகளாக, மண்ணோடுமண்ணாகத் தூங்கிக் கிடந்த இப்படுகொலையை அலசுகின்றன.

மக்களோ, ‘‘பேப்பரை பாத்தனியோ, சாவச்சேரியில எலும்புக்கூடாம். கிட்டுமாமாவின் நினைவா ஏதோ கட்டிறதுக்கு போஸ்ட் நடகிடங்குகிண்டேக்க தானாம் அகப்பட்டதாம். நகையளும் கொஞ்சம் கிடந்ததாம். பொம்புளையளின்ரை எலும்புகளாம். உது எளிய இந்தியன்ரை வேலையாத்தான் இருக்கும். காவல்துறை விசாரணை செய்யுது, கெதியில கண்டுபிடிச்சிடுவாங்கள்’’.

இது இவ்வாறிருக்க, காவல் துறையினருக்கு பயனுள்ளதும், மிகவும் முக்கியத்துவமானதும், தகுந்த ஆதாரங்களுடன் பெறுமதிமிக்கதுமான தகவல் கிடைக்கிறது.

அதன் பிரகாரம் காவல் துறையினர் புதியதோர் உத்வேகத்துடன் விசாரணையைத் தொடர்கிறார்கள்.

இவ் எலும்புக்கூடு மீட்பையும், அது கண்டெடுக்கப்பட்ட இடத்தையும், நாளேடுகளில் வாசித்தும் வாய்மொழியாகப் பலர் சொன்னதையும் கேட்டு அறிந்த சிவயோகநாதன், இராஜேஸ்வரி (கணவன் - மனைவி) ஆகிய இருவரும், 1987ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ஆம் திகதி தமது கிராமமான கேடில்ஸ்புரத்திலுள்ள தமது வீட்டிலிருந்து புறப்பட்ட மினிபஸ்சையும் -அதிலுள்ள 16 பேரையும் ரவைகளால் குத்திக்குதறிய (சுட்டுக் கொன்ற) சம்பவமாக இருக்குமோ என எண்ணி, தகுந்த ஆதாரங்களுடன் 23.04.1993 அன்று காலை 11. 40 மணியளவில், யாழ். பழைய பூங்காவிலுள்ள காவல்துறையின் தலைமைப் பணிமனையை அடைகிறார்கள். அங்கு இவர்களின் வாக்குமூலங்களும், ஆதாரங்களும் காவல்துறையினரால் பெறப்படுகின்றன.

சிவயோகநாதன், இராஜேஸ்வரி ஆகியோர் கூறினர்: இந்திய - புலிகள் போர் தொடங்கிய போது, இந்திய இராணுவம் மக்களைக் கடுமையாகத் தாக்கியும், சுட்டும் கொன்று குவிக்கிறது. இதற்கு அஞ்சி பெருமளவு மக்கள் தங்கள் வீடு, வாசலை விட்டு இடம்பெயர்கிறார்கள்.

27. 10. 1987 அன்று பகல், இந்தியனின் ‘முதலை’ ஹெலி சாவகச்சேரியிலும்அதை அண்டிய பகுதியிலும் பொழிந்த குண்டுமழைக்கு அஞ்சி, கேடில்ஸ்புரம் கிராமத்தில் வாழ்ந்த சிலரும் இடம்பெயர்கிறார்கள்.

அவர்களுள் நாகராசா குடும்பத்தைச் சேர்ந்த எண்மரும், மகேஸ்வரி குடும்பத்தைச் சேர்ந்த மூவரும், இந்திரன் ஐயர் குடும்பத்தைச் சேர்ந்த அறுவரும், சாம்பல்தீவைச் சேர்ந்த ரங்கனும், அவனுடைய சிநேகிதனும், அரியாலையைச் சேர்ந்த அம்பிகைபாலனும், மட்டுவிலைச்சேர்ந்த நாகம்மாவும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜெயா என்பவரின் ‘கிழவி றோசா’ எனும் மினிபஸ்சில் பளைக்குப் போகத் திட்டமிடுகிறார்கள்.

அதன்படி இரவு 9 மணியளவில் சாரதி ஜெயா உட்பட மொத்தம் 22 பேரும், அவர்களது அத்தியாவசியப் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு எங்களிடம் விடைபெறுகிறார்கள். பஸ்சில் ஏற்பட்ட சிறு கோளாறையும் பிள்ளையார் கோயிலடியில் திருத்திக்கொண்டு பஸ் சென்றுவிட்டது.

சுமார் 11 மணி.

சாவகச்சேரி பகுதியிலிருந்து கடுமையான ஷெல் தாக்குதல்களும், தொடர்ச்சியான துவக்கு வெடிகளும் கேட்டுக்கொண்டிருந்தன. சென்ற பஸ்சிற்கு இந்திய இராணுவத்தால் ஆபத்தேற்பட்டிருக்குமென நாம் நினைத்தோம். சிறிது நேரத்தின்பின் எவ்வித சத்தமுமில்லை.

28. 10. 1987-அதாவது மறுநாள் காலை, எமது வீட்டிலிருந்து புறப்பட்ட மினிபஸ்சை இந்திய இராணுவம் சுட்டு அதிலிருந்த ஆட்களையும் கொன்றுவிட்டார்கள் என அறிந்தோம்.

அதேவேளை, இந்திரன் ஐயரின் மனைவி பஸ்சில் செல்லும்போது காயப்பட்டு கமலாசனி வித்தியாசாலையில் இருப்பதைக் கேள்விப்பட்டு, அவரை எமது வீட்டிற்கு ஏற்றிவந்தோம். அவரிடம் நான் நடந்ததை விசாரித்தபோது, ‘‘நாம் பஸ்சில் செல்லும்போது திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. எம்மோடு பயணம் செய்த பலர் என் கண்



முன்னேயே மடிந்தனர். நான் தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன் நாம் வந்த பஸ்சைச் சுட்டது இந்திய இராணுவம்’’ என்றும் கூறினார்.

நாவலடியைச் சேர்ந்த இருவர் இந்திரன் ஐயரின் மகள் கலைவாணியை எம்மிடம் கொண்டுவந்துவிட்டார்கள். நான் அச்சின்னப்பிள்ளையை வினாவியபோது, ‘‘பஸ்சில் உள்ள அனைவரும் நித்திரை கொள்கிறார்கள். நான் கூப்பிட்டும் ஒருவரும் எழும்பவில்லை. எனவே நான் இறங்கி வந்திட்டன்’’ என பயந்த முகத்துடன் கூறியதாக இராஜேஸ்வரி கூறுகிறார்.

அத்துடன் காயமடைந்த நிலையில் நாகராசா பரமேஸ்வரி, நாகராசாவின் மகள் சின்னவள், நாகராசாவின் இளைய மகள், சாரதி ஜெயா உட்பட மொத்தம் 6 பேர் உயிர் தப்பினார்கள்.

இச்சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைவரது உடல்களையும் சாவகச்சேரி நவீன சந்தைக்கு அண்மையில் தாட்டுள்ளதாகக் கேள்விப்பட்டோம். பயத்தின் காரணமாக இந்திய இராணுவத்திடம் நாம் எதுவும் கேட்கவில்லையென்றும் கூறினார்.

அத்துடன் குழியில் இருந்து மீட்கப்பட்ட உடைகள், நகைகள் என்பவற்றை யார் யாருடையது என அடையாளமும் காட்டினார். இவற்றையெல்லாம் காவல்துறையினர் பதிந்து வைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட – இச்சம்பவத்திலிருந்து தப்பியவர்கள் திருமலையில் வசிப்பதால், அவர்களை வரவழைத்து அப்பொருட்களை ஒப்படைக்கும் நடவடிக்கையைக் காவல்துறையினர் மேற்கொள்கின்றனர்.

(9ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com



# வீர வணக்கம்

சிரித்து வரவேற்ற செந்தழித்த முகமெங்கே ?
சிந்தித்து உரையாற்றிச் சிறப்புற்ற நாவெங்கே?
அணைத்துக் கரம்போட்டு... ஆதரித்த மனமெங்கே?
அன்னை தமிழ் வாழ வந்துதித்த மகனெங்கே?

ஈர்ப்புச் சக்தியென இழுத்திருந்த கண்ணெங்கே?
இதயத்தை ஊடுருவி எழுச்சி தந்த குரலெங்கே?
பார்ப்போரைப் பலப்படுத்திடும் பரிணாமத் தோற்றமெங்கே?
பாய்கின்ற கேள்விகட்குப் பதில் கூறும் புருவமெங்கே?

தேசப்படங்கீறித்...... தேசியத்தின் வளங்கூறி ......
மானப்பரம்பரையின் மறவர் உரங்கூறி ...
மக்கள் பலங்கூறி ... மனிதத்துவத்தின் நலன்கூறி......
பாடங்கள் பல சொல்லித் தந்த சுடரெங்கே?

தலைவன் புகழ்பாடி ...... அவன் தலைமைத் திறன்பாடி .....
இலையிவன்போலோர் தலைவன் ..... இனியெமக்கேயெனக்கூறி
'நிலையான தமிழீழம் தான் தலைவன் முடிவாகும்!
குலையாது இவன் திண்மை ...... கோடி துயர் வந்தாலும்!
வளையாது இவன் வரைந்த தன்மானப் பெருங்கோடு!
பலியானது பகையோடும் பலநூறு திட்டந்தான்!'
என்றெமக்குத் தினம் கூறி எமை வளர்த்த உருவெங்கே?
குன்றனைய துணிவோடு நிமிர்ந்து நின்ற வடிவெங்கே?

சோராதீர் என்றெம்மைச் சுற்றிநின்ற கரமெங்கே -
சுதந்திரந்தான் முடிவென்று ...... சூளுரைத்த புலியெங்கே?
பாராளும் வேந்தருக்கும் பணியாத பலமெங்கே?
படை கூட்டி நாடாண்டு புகழ் சேர்த்த திருவெங்கே?
கூடப் பிறந்தெம்மைக் காட்டிக் கொடுப்போரை .....
கோபித்தெழுந்து கொதித்து நாம் நிற்கையிலேயே ......
'கோபிக்க வேண்டாம்நீர்! அவர் நாளை திருந்திடுவார்!
கொள்கை தெளிவுற்றுத் தமிழீழம் அடைந்திடுவார்! '

காதில் வீழ்ந்த ...... பாழும் செய்தியாற் ......
கதி கலங்கியே ..... தேகம் நடுங்கினோம்!
ஆழக்கடலில் இந்தியப் படையின் ......
நாச வலையிற் சிக்குண்டாராம்!

எல்லை கடந்து எமன்போல் எதிர் கொண்டு ......
கள்ளத் தனத்தாற் கைப்பற்ற முயன்றாராம்!

பகைவன் பிடியினிலே சிக்குமுன்னே உயிர் போக்கி
மறையும் விதிக்கு விலக்காகிப் போகாமற்
படகில் மரணித்துத் தீப்பிழம்பாய்ப் போனாராம்!

வெள்ளைச் சிரிப்பும் ...... விரி முகமும் சுடர் விழியும்
இல்லை இனியென்று எப்படி நாம் நம்பிடுவோம்!

சோதனைகள் தீயாகிச் சுட்டெரித்து நிற்கையிலே ...
வேதனைகள் பாறையென மேல் விழுந்து அமுக்கையிலே
பாதையிலே மேடுபள்ளம் பயணத்தைக் கெடுக்கையிலே......
தீது நின்ற பகைக்கூட்டம் .... திசைக் கொன்றாய்
முளைக்கையிலே ......
ஏது வழியென்று மனம் தடுமாறிப் போகையிலே ...
நீதி சொல்லி நெறிப்படுத்தி .. நெஞ்சுக்கு உறுதி தந்து...
மோதி வெற்றி காண்போம் ... முடிவு தமிழீழ மெனச்
சோதிப்பிழம்பாய் எம்முன்னே நின்றவனே!

முப்பத்து மூன்று வயதுனக்கு ஆனாலும்
உள்ளத்து முதிர்ச்சியிலே உனக்கு நிகர் யாரிருப்பார்?
பெற்றவளுக்கேது சொல்வோம்?
புரிந்தவளுக்கேது சொல்வோம்?
சுற்றத்திருந்து வளர்ந்தவருக்கு ஏது சொல்வோம்?

வெளிநாட்டில் நம்மவர்கள் இருக்கின்றார் எனநம்பி ......
வழியனுப்பி வைத்த மக்களுக்கு என்ன சொல்வோம்! -

பழிகூறி மொட்டைக் கடிதங்கள் தானெழுதி ......
வெளிநாட்டு அரசுக்கு வெறியேற்றியதன் மூலம் ......
பயங்கரவாதமென விடுதலைக்கு நாமமிட்டு ...
வெளியனுப்பி வைத்த பாவியர்கள் நாங்களென
எண்ணித்துடிக்கும் எம்மவர்க்கு ஏது சொல்வோம்?
மண்ணள்ளித் தூவி யழுவோர்க்கு ஏது சொல்வோம்?

நாடாண்ட மன்னவனை ...... நலங்கொடுத்த நல்லவனை...
நாடோடியாக்கி நரபலியாய்க் கொடுத்துவிட்டோம்!
தேடிக் கிடைக்காத செல்வத்தைத் தொலைத்துவிட்டோம்!
தேடிவந்த தெய்வத்தைத் திருப்பி யனுப்பிவிட்டோம்!

கிட்டு என்ற பெயரோடு கிழக்கிருந்து வந்தவனே!
கட்டியணைத்தெம்மைக் கழுவி எடுத்தவனே!
சத்தியத்தின் தூதனெனக் கண்ணெதிரே நின்றவனே!

பகிர்ந்துண்டு களிக்கையிலே ... பாலகனாய் வடிவெடுப்பாய்!
பசித்த முகம் கண்டால் ...... பதைத்து விருந்திடுவாய்!
தகுந்த முறை சொல்லித் தட்டிக் கொடுத்திடுவாய்;
தம்பியென்பாய்! அண்ணை யென்பாய்! மச்சான் வா
என்றிடுவாய்!
தங்கச்சி ...... அக்கா அம்மா வென்றன்போடு ......
இங்கிதமாய் உறவாடி ...... உள்வீட்டு உறவானாய்!
எங்கள் இதயத்தில் உட்கார்ந்து நிலையானாய்!

ஓரிரண்டு ஆண்டினிலே ...... உயிர்த் தோழனாய் நீ;
சின்னக் குழந்தைகட்குச் சிறப்பு விருந்தினன் நீ!
கன்னத்திற் தட்டிக் கட்டியணைத்திடுவாய்!
கிட்டு மாமாவோ? கிட்டு மாமாவோ?
மொட்டாய் உதிர்ந்துவிட்ட கிட்டு மாமாவோ?
இரக்கத்தான் போனாலும் சிறக்கத்தான் போ என்பாய்!
துலக்கி மினுக்கித் துப்புரவாய் வாழென்பாய்!

உறைக்கக் கண்டிப்பாய்! உணர்ச்சி சுடக் கோபிப்பாய்!
அடுத்த கணத்திலே ...... அன்போடு கிண்டல் செய்வாய்!
மறைத்துப் பழக்கில்லை! மாசுந்தன் மனதில் இல்லை!
நினைத்துக் கூறி நண்பர்களை வளர்த்திட்டாய்!
கலையென்றால் உயிர் உனக்கு! கனித் தமிழில் நல்லார்வம்
கலைஞர்களைக் காண்பதிலே .. ... மட்டற்ற சந்தோசம்!
அவர் வந்து காணுமுன்னே ...... நீ சென்று பார்த்திடுவாய்!
எதிரிகளின் பாசறைதான் என்றாலும் தமிழ்க் கலைகள்......
புதுமையுடன பூத்திட்டால் ... நீ சென்று பார்த்திடுவாய்!
பாடி மகிழ்ந்திடுவாய்! பரவசத்தில் கண்பனிப்பாய்!
கொள்கையிலே மாறுபட்டு நின்றாலும் அவர் கைகள்
குலுக்கியவர் படைப்பை வரவேற்று மகிழ்ந்திடுவாய்!

கலைஞர்களோடு கலைஞனென் உட்கார்ந்து ...
கலை விழாக்கள் செய்து ...... தேசியத்தைக் காத்திட்டாய்!

எழுத்துலகில் .. பேச்சுலகில் எத்தனையோ நண்பருண்டு!
பத்திரிகையுலகினிலும் பரிச்சயங்கள் உனக்கு உண்டு!

சமுதாயத் தொண்டர்களைச் சந்தித்து மகிழ்ந்திடுவாய்!
சமுதாயப் பணிகளுக்கும் சமபங்கைச் செய்திடுவாய்!
தமிழர் புனர்வாழ்வுச் சக்திகளை மெச்சிடுவாய்!
தமிழ்ச் சங்கமென்ன? எதிலும் நீ பங்கெடுப்பாய்!
சுக துக்கம் அறிந்து ...... சுற்றமென நின்றிருப்பாய்!
சக தமிழரெல்லாம் உறவென்று கொண்டிருப்பாய்!
கற்றவரும் மெய்சிலிர்க்கக் கேட்டிருந்து கல்லாவர்!
(நீ) கற்ற இடம் ஏதென்று புரியாது புல்லாவார்
உலக அரசியலை உற்று அவதானித்து ...
வளரத் தமிழீழம் ... வாய்ப்புக்கள் தேடிடுவாய்!
உலகத் தமிழர்கள் சமுதாயம் மேன்மையுறப் ......
பலதும் அறியும் மாணவனாய்ப் பறந்திடுவாய்!
சுற்றியிருப்போரின் கெட்டித்தனமறிந்து
புத்தி பல கேட்டுப் புதுவழிகள் புரிந்திடுவாய்!

இத்தனைக்கும் மேலாய் உலகத்தமிழர்களின்
ஒற்றுமையை நோக்கி உறுதி பல எடுத்திடுவாய்!
பாழ்பட்டுப் போனவர்கள் நாம் பறிகொடுத்து நிற்கின்றோம்!
ஊழ் வந்து கூடி ..... உனையெடுத்துச் சென்றதுவோ?

உன்னை மட்டுமா பலியெடுத்தார் பாவியர்கள்?
உன்னோடு ஒன்பதுபேர் ஒன்றாகப் போயினரே!
விடுதலையின் வித்துக்கள் நாளை எம்மண்ணை
ஆளும் தகுதி பெற்ற தாரகைகள் ஒன்பது பேர்
வீர மரணத்தைத் தழுவியது கொடுமையந்தோ!
கிட்டுவுடன் வளர்ந்து கிட்டுவுடன் படைசேர்ந்து
கிட்டுவுடன் சிறைக்குள்ளும் சென்று வந்த
' குட்டிசிறி ' என்னும் இளவிளக்கும் பலியானான்.

எட்டுப்பேர் இன்னும் இருவரும் இளைத்தோரா?
வேலன், நாயகன், றொசான், ஜீவா, குணசீலன்
தூயவன், நல்லவன், அமுதன் என்ற நன்
முத்துக்கள் கடலுக்குள் சிதறி எரிந்தனரே!

முப்பத்து ஆறு மணித்துளிகள் நடுக்கடலில் .....
சுற்றி நின்று வளைத்தார் சிறுமை கொண்ட இந்தியரே!
இத்தரணி யறியாமல் ... எல்லை கடந்து சென்று.....
எத்தர்கள் உம்மை ..... ஏமாற்றத் துணிந்தனரோ?

'ஈழத்தில் கிட்டு' என்ற தலைப்பையி[illegible]லோ பார்த்திருந்தோம்

எங்கள் தலைவனை ...... இறுக அணைத்தபடி ......
நின்று சிரிக்கும் புகைப்படத்தைப் பார்த்திருந்தோம்
யாழ்ப்பாணம் மட்டு நகர் திருமலையில் மன்னாரில்......
வன்னியிலே...... ஊர்காவற்றுறையினிலே...... உன்முழக்கம்
கேட்கும் நாளன்றோ...... காத்திருந்தோம் ராசாவே!

நெஞ்சில் அடித்து நிலத்திற் புரண்டழவும்
அஞ்சிக் கிடக்கும் அந்நிய மண் வாழ்வினையே
தஞ்சமென நினைக்கும் தாழ்வுற்ற எமக்கெல்லாம்......
என்றுதான் நிம்மதியோ? ஆற இடமறியோமே!
எம் நெஞ்சில் என்றென்றும் ஒளி கொடுத்து நிற்குமையா!
ஓய்ந்து விடமாட்டோம் நாம்! உன் பாதை வழி நடப்போம்!
வேங்கையரின் போர்க்குரலை ..... விண்வரையும்
கேட்கவைப்போம்!

சிங்களவரை யெதிர்த்தேயல்லோ...... வேங்கையாய்
வடிவெடுத்தீர்
பொங்கும் தன்மானப் பொறிகளாய்...... உருவெடுத்தீர்
சங்கெடுத்து வீரச் சமர்புரியப் புறப்பட்டீர்
எங்கள் தமிழினத்தின் எதிர்கால வாழ்வுக்காய்......
உங்கள் உயிரோடு உறவுகளை அர்ப்பணித்தீர்!

பட்டுமெத்தைப் படுக்கை விட்டீர்! பாற்சோறு தானிழந்தீர்
கொட்டுமழை...... குளிர்...... வெயில் அத்தனையும்
தாங்கி நின்றீர்
பட்டப் படிப்பிழந்தீர் பதவி...... பணம் தனை மறந்தீர்
எட்டுத் திசையெல்லாம்...... எமக்காக நீர் பறந்தீர்

அம்மாவின் அன்பு அணைப்பைப் பிரிந்து சென்றீர்
அக்காவும் அண்ணாவும் தம்பியோடு தங்கச்சி .....
தடுத்து மறித்தாலும் .. தமிழீழ விடுதலைதான்......
தலையாய கடமையென்று தாவி வந்தீர் போராட

தியாகத்தின் உச்சியிலே...... தீரத்தின் விளிம்பினிலே......
விவேகத்தின் வரப்பினிலே..... விஞ்ஞானப் பரப்பினிலே......
புதிது புதிதாகப் படைத்திருந்தீர் போர்க்கருவி!
பகைவன் தடுமாறிப் பயந்தோடும் நிலை கண்டீர்
வகைவகையாத் தாக்குதல்கள்...... நிலைகுலைந்தான்
நம்பகைவன்

சிங்களர்தான் பகையென்றான் தமிழீழம் எப்பொழுதோ
எங்கள் விடுதலையின் எதிர் காலம்... எப்படியோ
பக்கத்திருந்தெம்மைப் படுகுழியிற் தள்ளவென்று......
துட்டர் அரசொன்று ... துடியாட்டம் போட்டதையோ!

யுத்தம் புரிந்து ஆற்றாமற் துரோகத்தால் .....
வெற்றி பெறலாம் என நினைத்த ... இந்தியமே!
ஏய்த்துக் குழிபறித்து...... ஏமாற்றி எமையழிக்க
வாய்ப்புக்கள் பார்த்து ..... வந்தாரே இந்தியர்கள்


சத்தியத்தின் தந்தை காந்தி பிறந்த மண்ணில்
சதிகாரர் ஆட்சி புழுத்து நெளிந்ததையா
ஊழற் கொடுமை ..... லஞ்சத்தின் பேயாட்டம்
அத்தனையும் சேர்ந்து அரசாட்சி புரிந்ததையா!
தேசியத்தைக் காத்து .. தம்மக்கள் விடுதலைக்காய்ப்
போராடும் மறவர்களைப் பசியாறத் துடிக்கின்ற......
நாச அரசியலின் நாடாமோ இந்திய மண்!
எங்கள் விடுதலையின் ஒப்பற்ற தியாகிகளை......
உண்டு பசியாறி ஏப்பமிட்டாய் இந்தியமே!

ஒன்றா இரண்டா...... பத்தா ஒரு நூறா?
கொன்று குவித்துக் குதறி எறிந்தாய் நீ?

சிங்களத்தார் செய்த கொடுமையிலும் பன்மடங்கு ...
இந்தியர்கள் அன்றோ...... எமக்கிழைத்துச் சென்றார்கள்;
இந்து சமுத்திரத்தின் எல்லைகளைத் தமதாக்கிச்
சொந்தங் கொண்டாடத் திட்டங்கள் தான் தீட்டி
வந்து புகுந்தார்! வழிப்பறிகள் கொலை கொள்ளை......
என்று பல புரிந்து எம்மினத்தை வதைத்திட்டார்!

குமரப்பா, புலேந்திரன், அப்துல்லா, ரகு, நளன்,
ஆனந்தக்குமார், மிரேஸ், அன்பழகன், றெயினோல்ட்,
பழனி, கரனோடு தவக்குமார் என்ற
பன்னிரண்டு பேரை படகினிலே பறிகொடுத்தோம்

www.eelamview.com



## எங்கள் தலைவிதியை,
## எங்கள் போராட்டத்தை,
## எங்கள் மக்களின் உரிமைகளை,
# இந்தியா தீர்மானிக்க முடியாது.

## எங்கள் தலைவிதியை நிர்ணயிப்பது,
## எங்கள் உரிமைகளை நிர்ணயிப்பது,
## எங்கள் நாட்டை நிர்ணயிப்பது,
# நாங்கள் மட்டும்தான்.

**கேணல் கிட்டு**

உண்ணா விரதத்தை உலகுக்கு வெளிப்படுத்தி......
உரிமைப் போராட்ட வழிகண்ட உத்தமராம்
அண்ணல் மகான் காந்தி பிறந்தமண் இந்திய மண்!
எங்கள் திலீபன்... உயிர்கொடுத்து ஒளியானான்!
இந்த இந்தியா இருளிற் கிடந்தது!

ஜொனி என்ற வீரத் தியாகியையும் பறிகொடுத்தோம்!
இயக்கத்தின் வேர்களென இருந்த இவரையெல்லாம்
அரக்கத் தனங் கொண்ட இந்தியரே பறித்தெடுத்தார்

எத்தனைதான் நடந்தாலும்... எம் தாகம் தணியாது!
எங்கள் தமிழீழப் போராட்டம் தளராது!
சத்தியமோ சாகாது! தீயினிலும் வேகாது!
நித்தியமாய் நிலைத்திருக்கும்! நீதியென்னும் ஒளி பிறக்கும்!

தறிக்கத் தறிக்கத் தளிர்த்தெழுவோம்! இது உறுதி!
விழுத்த விழுத்த .. விழுந்தெழுவோம்! இது உறுதி!

எரிக்க எரிக்க... மீண்டும் உயிர் பெறுவோம்!
நெருக்க நெருக்க... நீண்டு வளர்ந்திடுவோம்!
உருக்க உருக்க... உலையிட்ட பொன்னாவோம்!
மறுக்க மறுக்க .. மடையுடைக்கும் ஆறாவோம்!
ஒறுக்க ஒறுக்க... நிலம் பிளக்கும் கடலாவோம்!

உடல்கள் அழிந்தாலும் மாவீரர் தந்து சென்ற
திடமான தமிழீழக் கொள்கைகளோ அழியாது!
சொல்லால் உணர்வாற்... செயலால் எமக்குறுதி
உள்ளத்தில் விதைத்த... உத்தமர்கள் அவரன்றோ!

இந்தியமே! சிங்களமே! எமையழிக்க எண்ணாதீர்!
மூத்த வளர்ந்தகுடி! முச்சங்கம் கண்ட மொழி!
ஆர்த்து எழுந்த கலை! அகிலத்தின் ஆதி நிலை!
செந்தமிழின் மீது ஆணை! எந்தமிழர் மீதாணை!
எந்தலைவன் நெஞ்சத்தில் ஒரு தர்மம் வாழ்கிறது!
எந்தாகம் தமிழீழத் தாயகமே! இது உறுதி! ○

**தளபதி கிட்டு அவர்களும், மற்றும் ஒன்பது போராளிகளும் இந்தியச் சதியில் சிக்கி வீரச்சாவடைந்ததன் பின், இந்தியாவைக் கண்டித்து லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் இவ் இரங்கற் பாடல் இசைக்கப்பட்டது. பின்னர், இங்கிலாந்திலிருந்து வெளிவரும் ' தமிழன் ' இதழில் 01 - 02 - 1993 அன்று இது பிரசுரிக்கப்பட்டது.**

www.eelamview.com



# போராளியின் குருதிச்சுவடுகள்

யாழ்ப்பாணத்தில் ஒதுக்குப்புறமான ஒரு கிராமம். அங்குதான் எங்களது பயிற்சி முகாம் இருந்தது.

ஒரு நாள், மதியம் ஒரு மணி இருக்கும். எமது வழமையான பயிற்சி நேரம் அது. உச்சி வெயில். சூரியன் தனது முழு வெப்பக்கதிர்களையும் எங்கள் தலைகளை நோக்கிச் செலுத்துவதைப் போல இருந்தது. கீழேயோ வெறும் மணல். சூரியனால் சூடேறி தன்னுள் புதையும் எங்கள் கால்களை அனலாய் எரித்தது.

அந்தச் சுடுமணலில் ஓடி உருண்டு தவழ்ந்து...... அதிகாலையிலிருந்து தொடரும் கடும் பயிற்சி, உடலிற்கு மிகுந்த வேதனையையும் களைப்பையும் கொடுத்துக் கொண்டிருந்தது. பயிற்சிப்பொறுப்பாளர் கடுமையான பயிற்சிகளைத் தந்து கொண்டிருந்தார்.

இந்த நிலையில் படுத்து நிலையெடுப்பதற்கான உத்தரவு பிறக்கிறது. நிலம் சுடும் என நினைக்க நேரமிருக்காத மின்னல்வேகப் பயிற்சிகள்.

உடனேயே கீழே விழுந்து நிலையெடுத்தோம். முழு உடலையும் அணைத்து அள்ளி எடுத்தது சுடுமணல். உடல் கொதித்தது. வேதனையில் நாங்கள் துவண்டோம்.

அருகில் சின்னா. டம்மி றைபிளை அவனது கைகள் தோளோடு அணைத்து இறுகப்பற்றியிருந்தன. கண்கள் உறுதியோடும் வேட்கையோடும் இலக்கை நோக்கியிருந்தன. மணலின் கொதிப்பு அவனைத் தாக்குவதாகத் தெரியவில்லை. முகத்தில் எதுவித சலனமுமின்றியிருந்தான். ஆனால், அவனது வாய் மட்டும் எதனையோ உச்சரித்துக்கொண்டிருந்தது.

அன்றைய பயிற்சிகள் முடிந்து எங்களெங்கள் கூடாரங்களுக்கு நாங்கள் சென்றுவிட்டோம் மாலை நேரம். எல்லோரும் ஓய்வாக சிரித்துக்கதைத்து தேநீர் அருந்திக் கொண்டு மகிழ்ந்திருந்தார்கள். சின்னாவிடம் சென்றேன்.

# லெப். சின்னா

''பயிற்சியின் போது உனக்குள்ளேயே என்னவோ சொல்லிக் கொண்டிருந்தியே மச்சான்?...... ஆரையடா திட்டிக் கொண்டிருந்தனீ......?''

'நான் ஒருத்தரையும் திட்டேல்லை. 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டு இருந்தனான்.' அவன் தொடர்ந்து சொன்னான்: ''தாங்க முடியாத கஸ்டமான பயிற்சிகளைச் செய்யும் போதெல்லாம் நான் மனசுக்குள்ள அப்படிச் சொல்லிக் கொள்ளுவன். அந்நேரங்களில் களைப்பும் வேதனையும் மறைந்து போய் விடுகின்றது. அதோட எனக்குள்ள உற்சாகமும் பிறக்கின்றது''.

அவன் சொல்லி முடித்தபோது நான் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

பயிற்சி முகாமில் எனது மனதில் இப்படித்தான் சின்னா முதன்முதலில் இடம் பிடித்தான்.

* * *

இப்படித்தான் இன்னுமொருநாள். அது ஒரு நடு இரவு நேரம். பன்னிரண்டு .. ஒரு மணிக்கு மேல் கடந்திருக்காது. பகல் முழுவதும் நடந்த பயிற்சிகளின் களைப்பால் எல்லோரும் ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்த நேரம் அது – காவல்களைத் தவிர.

திடீரென 'அலேட் விசில்' எங்கள் தூக்கத்தைக் கலைக்கிறது. உடனடியாக நாம் எல்லோரும் தளத்தைச் சுற்றியிருக்கின்ற – எங்களெங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள – காவல் நிலைகளுக்கு விரைய வேண்டும். அதற்கான அவசர சமிக்ஞையே அது.

நாம் தங்கியிருக்கும் முகாம் எதிரியின் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலை வந்தால், அது எந்த நேரமாக இருந்தாலும் எப்படி முகாமைப் பாதுகாக்கவேண்டும் என்ற பயிற்சிதான் அது.

துடித்துப்பதைத்து எழுந்து, தலைமாட்டில் கிடந்த றைபிளை கை பிழைக்காமல் எடுத்துக்கொண்டு, கும்மிருட்டில் தடவித்தடவி அதே வேளை வேகமாக நகர்ந்து காவல் அரண்களுக்குச் சென்று, சரியான முறையில் நிலை எடுத்து விட்டோம்.

ஒருமணி நேரம் கடந்திருக்கும். அரண்களிலிருந்து திரும்புவதற்கான அறிவித்தலை எமது பொறுப்பாளர் அனுப்புகிறார். எல்லாக்குழுக்களும் நிலைகளிலிருந்து வெளியேறித் தங்கள் தங்களது கூடாரங்களுக்குத் திரும்பிவிட்டன.

மீண்டும் ஆழ்ந்து தூங்கி நாங்கள் மறுநாள் காலையில் எழுந்து, பயிற்சிக்குத் தயாராகி குழுரீதியாக வரிசையில் நிற்கும் போதுதான் பார்த்தோம், சின்னாவின் குழுவைக் காணவில்லை

சரா அண்ணைக்கு (உடனேயே) விளங்கிவிட்டது. இரவு நிலை எடுக்கச் சென்ற குழு திரும்பவில்லை என்பது புரிந்து விட்டது. அவசரமாக சின்னாவின் குழு நிலை எடுத்திருந்த திசை நோக்கிச் சென்ற சரா அண்ணனை சிரித்த முகத்தோடு பார்த்த சின்னா, ''ஏன் அண்ணை இன்னும் 'வித்றோ விசில்' ஊதேல்லை?'' என்று கேட்டான்,

வழமையான இடத்திற்கு வெளியே தூரத்தில் அந்தக் குழு நிலை எடுத்திருந்தமையால், திரும்புவதற்கான அழைப்பு அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. அதனால் முதல்நாள் பெய்த மழையினால் சேறாகிப் போய்க் கிடந்த நிலத்தில்– உடலை உறைய வைக்கின்ற பனிக்குளிரில் – நுளம்புகளின் ஓயாத குத்தல்களுக்கும் நடுவில் – அவன் தனது குழுவை விழிப்பான கண்காணிப்பில் ஈடுபடுத்தினான்.

எவரையும் தூங்கிப் போக விடாமல் பார்த்து, கடமையில் கண்ணாக விழித்து, திரும்புவதற்கான உத்தரவு வரும்வரை அவன் இரவிரவாகக் காத்திருந்தான். அக்குழுவின் மன உறுதியையும் அவனுடைய வழிகாட்டலையும் பயிற்சி ஆசிரியர் மெச்சினார். அத்துடன் அன்றைய பகல் பயிற்சியிலிருந்து சின்னாவின் குழு விடுவிக்கப்பட்டு ஓய்வு கொடுக்கப்பட்டது.

உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிகின்ற கட்டுப்பாடு மிக்க தன்மையை, எதுவரினும் கடமையை இம்மியும் பிசகாமல் செய்து முடிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை கொண்டவனாகச் சின்னாவை பயிற்சிமுகாம் வளர்த்து எடுத்தது.

* * *

பயிற்சி முகாம்...உண்மையில் அது ஒரு பட்டறைதான். அங்குதான் தேசத்தின் புதல்வர்கள் போரர்ளிகளாகப் புடம்போடப்படுகின்றார்கள்

சாதாரண சமூகவாழ்வு நிலையிலிருந்து தம்மைச் சுதந்திரப் போராட்டத்திற்குள் நுழைக்கின்ற ஒவ்வொருவரும் இங்கேதான், முழுமையான விடுதலை வீரர்களாக வனைந்தெடுக்கப்படுகின்றார்கள்.


பயிற்சிப் பாசறை என்பது, சாதாரணமாக எல்லோரும் நினைப்பதைப் போல, ஆயுதங்களைக் கையாள்வதுடன் கூடிய இராணுவப் பயிற்சிகளைப் பெறும் உடற் பயிற்சிக் கல்லூரியாக மட்டும் அது குறுகிவிடாது.

புலிகளின் பயிற்சிப்பாசறைகள் வித்தியாசமானவை. அதிசிறந்த படைத்துறை சார் பயிற்சிகளுடனும் – அறிவூட்டல்களுடனும் அங்கு உள்ளங்கள் தூய்மையாக்கப்படுகின்றன, தெளிவூட்டப்படுகின்றன, உறுதியேற்றப்படுகின்றன. அங்கே செல்கின்றவர்கள் வெளியேறும் போது அசாதாரண மனிதர்களாகவே வருவார்கள்.

இயல்பாகவே தேசப்பற்றும் தியாக உணர்வும் கொண்டவர்களே தேசத்திற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வருகின்றார்கள். அவர்களது போராட்ட வாழ்வு பயிற்சிப்பாசறையில்தான் ஆரம்பிக்கின்றது. அங்கே அவர்களது உணர்வுகள் உரமேறுகின்றன; மனம் உருக்குப் போன்ற உறுதி பெறுகின்றது.

எதற்கும் மேலாக தாயகத்தை நேசிக்கின்ற மேன்மையை – தாயகத்திற்காகச் சாகவும் தயாரான சிந்தையை – அடுத்தவர்களை ஆச்சரியப்பட வைக்கும் போராற்றல் கொண்ட விந்தையை – எத்துணை இடர்வரினும் குலைந்து தளராத உறுதித் துணிவை – கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சீரிய இயல்புகள் வழுவாத தன்மையை – ஒழுக்கம், நேர்மை, பண்பு, முயற்சி, அன்பு, ஆளுமை என உயர்ந்த வாழ்வு நெறிகளை – பயிற்சி முகாம் அவர்களுக்கு வழங்குகின்றது.

போராளிகளின் பயிற்சிக்கால வாழ்வும், அக்காலத்தில் அவர்கள் பெறுகின்ற ஓய்வில்லாத கடுமையான பயிற்சிகளும் அனுபவங்களும்தான் போர்க்களத்திலும், மக்கள் மத்தியிலும் புலி வீரர்களுக்குத் தனிப்பெரும் கௌரவத்தையும் மதிப்பையும் பெற்றுக்கொடுக்கின்றன.



**லெப். சின்னா - சொக்கன்**
(கிறிஸ்ரி ராஜ்மோகன்)
ஆலடிச்சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இந்தப் பயிற்சிகள் மட்டுமல்ல, அங்கே நடைபெறும் வகுப்புகள் சிறந்த கல்வி அறிவை ஊட்டுவதுடன், பரந்த உலகப் பார்வை கொண்ட பொது அறிவையும் வழங்குகின்றன.

பயிற்சிமுகாம் பொறுப்பாளர் சரா அண்ணன், பொன்னம்மானைப்பற்றிச் சொல்லுவார். பயிற்சி தரும் பொறுப்பாளர்கள், செல்வராஜா மாஸ்டரைப்பற்றிச் சொல்லுவார்கள். இவர்கள் எவ்வளவு திறம்பட பயிற்சிமுகாம்களை நடாத்தி புதிய போராளிகளை உருவாக்கினார்கள் என்பதைப்பற்றிச் சொல்லுவார்கள். போராளிகளை சிறந்த போர்வீரர்ககளாக மட்டுமன்றி, சிறந்த தேசபக்தர்களாக உருவாக்கினார்கள் என்பதைப்பற்றிச் சொல்லுவார்கள்.

* * *

சின்னா! – பெயருக்கேற்றால் போல் சின்னவனாகத்தான் இருந்தான்.

கிறிஸ்ரி – கமலராணி தம்பதிகளுக்கு இவனுடன் சேர்த்து நான்கு குழந்தைகள்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

## லெப். சின்னா

ஒரு அண்ணனையும், 2 பெண்களையும் உடன் பிறப்புக்களாகப் பெற்ற இவனது இயற்பெயர் ராஜ்மோகன். யாழ்ப்பாணத்தில் நல்லூர் இவர்களது ஊர். றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வி பெற்ற சின்னா, பின்னர் பரந்தன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றான். படிப்பில் சிறந்து விளங்கிய சின்னா போராட்டப்பணிகளிலும் ஆர்வத்தோடு ஈடுபட்டான்.

வெளியிலிருந்து போராட்டத்திற்கு உதவும் உற்ற தேசபக்தனாக விளங்கிய சின்னா, 1991 இன் நடுப்பகுதியில் இயக்கத்தோடு தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டான்.

சின்னாவின் முதற்களம் ஆனையிறவுப் பெருஞ்சமர். அதில் அவன் பின்கள வேலைகளிலேயே ஈடுபடுத்தப்பட்டான். சண்டை அரண்களை அமைத்தல், காயமடைந்த வீரர்களை அப்புறப்படுத்தல், ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் விநியோகித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்ட குழுவுடன், அவன் அங்கு நின்றான்.

ஆனையிறவுச் சமர் முடிந்த கையோடு சிங்களப்படை, மணலாற்றுக் காட்டின்மீது 'ஒப்பரேசன் மின்னல்' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமரில் சின்னாவும் பங்கேற்றான்.

தமிழீழத்தின் இதயத்தைப் பாதுகாத்த அந்தப் பெருஞ்சமரின்போது தனது திறமையை வெளிக்காட்டி ஆற்றல்மிகு சண்டைக்காரனாகக் களமாடியசின்னா, கையில் காயமடைந்து களத்திலிருந்து அகற்றப்படுகிறான்.

சின்னா!

மென்மையான சுபாவம் கொண்டவன். எல்லோரோடும் மிகுந்த அன்புடன் பழகுகின்றவன். எந்த நேரமும் புன்னகை தவழும் முகத்தோடு எங்களுக்குள் சுழன்று திரிந்தவன். ஓய்வாக இருக்கும் நேரங்களில் பகிடிக்கதைகள் சொல்லி எங்களைச் சிரிக்க வைத்து மகிழ்வித்துக்கொண்டு இருந்தவன். இன்று அவன் எங்களை விட்டுப் பிரிந்துவிட்டான்.

1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதி.

சிங்கள முப்படைகளும் இணைந்து முப்படைகளின் தளபதிகளும் வழி நடாத்த, போர்விமானங்கள் பீரங்கிக்கப்பல்கள் கனரக ஆயுதங்கள் டாங்கிகள் சகிதம், பாரிய இராணுவ நகர்வு ஒன்றைக் கட்டைக்காட்டிலிருந்து ஆரம்பித்தனர்.

குடாநாட்டிற்கான பொதுமக்களின் போக்குவரத்துப் பாதையைத் தடைசெய்து, இராணுவ வேலி போட்டு, முற்றுகையை இறுக்குவது அவர்களது நோக்கமாக இருந்தது.

அந்தக் கடுமையான சண்டையின் போது அங்குலமங்குலமாக நகர்ந்த படையினர், 09. 07. 1992 அன்று இயக்கச்சிவரை வந்திருந்தனர். அன்று இப்பகுதியிலிருந்த எமது நிலைகளை உடைத்துக்கொண்டு நகர எதிரி சண்டையிட்டுக் கொண்டு இருந்தான். எதிரியின் கவசவாகனங்களும் எறிகணைகளும் அவனுக்குப் பாதை அமைத்துக் கொடுத்துக்கொண்டு இருந்தன.


சின்னாவோடு நாங்கள் நின்றிருந்த பகுதிமீது எதிரி ஒருமித்துத் தாக்கினான். பொம்மர்கள் குண்டுகளைக் கொட்டின. ரவைகள் ஆயிரக்கணக்கில் எம்மைக் கடந்து சென்றன. எதிரியின் பீரங்கித் தாக்குதல் கடுமையானதாக இருந்தது. தொடர்ந்து வந்து கொண்டிருந்த எறிகணைகளில் ஒன்று எங்களுக்கு மிகஅருகாக விழுந்து வெடித்தபோது, அந்தத் துயரம் நிகழ்ந்தது ..... சின்னாவை நாங்கள் இழந்துவிட்டோம்; சின்னாவோடு சீனுவும், தமிழ்மாறனும் கூட.

**- பாண்டியன்**

## லெப். ரவிக்குமார்

(நாகேஸ் யோகராஜா)
உப்போடை, கல்லடி.

பிறப்பு: 23-03-1964
வீரச்சாவு: 10-03-1986



# அழியாதோர் ஆகினீர்!

ரவிக்குமார்!

மீன்பாடும் தேன்நாடு என்று பேர்கொண்ட எமது மட்டக்களப்பின் இந்த வாவிக்கரையில் நின்று, இந்த மீன்களின் ரீங்காரத்தை எத்தனை நாள் ரசித்திருப்போம். இன்று நீயில்லாமல் நான் தனியே நிற்கையில் மீன்கள் பாடும் அந்த மெல்லிய ஒலிகூட சோக இசையாகவே தோன்றுகிறதே!

போன திங்கட்கிழமை உன்னையும் உன் தம்பி அன்ரனியையும் இழந்த அந்தச் சம்பவத்தை நினைத்தால் ஏற்படும் ஏதோ இனம் புரியாத உணர்வு, ஆத்திரத்தில் எம்மை நிதானமிழக்கச் செய்துவிடுமோ என்றுகூட அஞ்சுகின்றேன்.

அன்று நான் தடுக்கத்தடுக்க 'குளித்துவிட்டு உடனே வந்துவிடுகின்றேன்' என்று சொல்லிவிட்டு உனது தம்பியுடன் போனாய். 'தம்பியுடையான் சண்டைக்கஞ்சான்' என்கிற பழமொழிதான் அப்போது எனக்கு நினைவுக்கு வந்தது. அன்று, எனது தேகநிலை நன்றாக இருந்திருந்தால், எப்படியும் என்னால் முடிந்த வரை உன்னைக் காப்பாற்றியிருப்பேன்.




குளித்துவிட்டு இன்னவீதியால்தான் வருவாய் என்பதை அந்த மாபாவி விபரமாக தகவல் அனுப்பியிருக்கின்றான். உள்வீதியாலும் பிரதான வீதியாலும் நீயும் உன் தம்பியும் சுற்றிவளைக்கப்பட்டுவிட்டீர்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் ஒவ்வொரு தாக்குதலிலும் மின்னிய உனது வீரமே என் நினைவுக்கு வந்தது. அதிரடிப்படையினருக்கு இன்று ஏதோ கஷ்டகாலம் என்றுகூட நினைத்துக் கொண்டேன்.

அதிரடிப்படையினருடன் நீயும் உன் தம்பியும் மோதிக்கொண்டிருந்தீர்கள். இங்கு என் மனம் அலைமோதிக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் என்றால் எப்படியாவது தப்பிவிடலாம். ஊர் றோட்டில் நிற்கும் அதிரடிப் படையிடம் தப்பினால் வாவி. பிரதான வீதியில் நிற்கும் அதிரடிப்படையிடம் தப்பினால் கல்லடி முகாம் அல்லது கடல். நீயும் உன் தம்பியும் வைத்திருந்த ஆறு குண்டுகளின் சத்தமும் கேட்டவுடன் இனி என்ன செய்யப்போகிறீர்களோ என, என்மனம் படபடத்துக்கொண்டிருந்தது.



"காயமடைந்த உன் தம்பியின் அருகில் நீ ஓடியதும் ''அண்ணா நீ தப்பிவிடு'' என்று சொல்லவும் அதைக் கேளாமல் நீ அவனைத் தூக்கிக் கொண்டு ஓடும்போது காயப்பட்டாய் சந்தியில் அதிரடிப்படையினர் உங்களை நெருங்கவே ''அண்ணா என்னைச் சுட்டுவிடு'' எனக் கெஞ்சிய போது ..... ஆண்டவனே! உன் உடன்பிறப்பு அன்ரனியின் தலையில் நீயே ! ஓ எனக் கதறிய நீ சயனைட்டைக் கடித்துவிட்டு, ரவைகளை முடித்து உனது பிஸ்ரலை ஆற்றுக்குள் வீசி எறிந்த சம்பவம் பற்றி அச்சம்பவத்தை நேரில்



கண்டவர்கள் விபரித்தபோது, 'விடுதலையே... ! உனக்காக எத்தனை துயரங்களைத்தான் எம்மனதில் ஏற்ற வேண்டியுள்ளது' என எண்ணிக்கொண்டேன்.

காப்பிலித் தோற்றம் கொண்ட முரட்டுக் குழந்தையான நீ அழுததை, கல்லடியில் எவருமே கண்டிருக்க மாட்டார்கள். பாடசாலையில் உனது தம்பிக்கு யாராவது அடித்துவிட்டால் அவர்களை அடித்து உருட்டி துவம்சம் செய்துவிடுவாயே! நீ அடித்து நொருக்கிய கதிரைகள்தான் எத்தனை!

அவ்வளவுக்கு பாசம் வைத்திருந்த உனது தம்பியை நீயே எமனுலகம் அனுப்பியதையும், பகைவரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதில் நீயும் உன் தம்பியும் காட்டிய மன உறுதியை நினைக்கையிலும், தம்பியை இழந்த நிலையிலும் எமது இயக்க ஆயுதம் எதிரிகளிடம் சிக்கக்கூடாது என்பதற்காக அதை ஆற்றில் வீசி எறிந்த நிதானத்தையும் நினைக்கையில்,



தாங்க முடியாத வேதனைகளுக்கு மத்தியிலும் எம் மனதில் வைராக்கியம் மேலோங்குகிறதடா!

இவையெல்லாம் தலைவர் எமக்கு ஊட்டி வளர்த்த விடுதலை உணர்வின் வெளிப்பாடே.

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டாவது தலைவரை ஒழித்துவிட்டதாக 'லங்கா புவத்' பெருமையடித்துக்கொண்டது. ஆனால் எத்தனை ரவிக்குமார்கள், எத்தனை அன்ரனிகள் மீண்டும் மீண்டும் இந்த மண்ணில் மலர்வார்கள் என்பதை அது சொல்லப் போவதில்லை. நாளைய வரலாறு இந்த உண்மையை நிச்சயம் உணர்த்தத்தான் போகின்றது. அதுவரையில் நான் உயிருடன் இருப்பேனோ என்னவோ?

வழக்கத்தில் படுவான்கரையிலிருந்து கல்லடிக்கு தோணியில் வரும்போது எவ்வளவு திட்டங்களையெல்லாம் கதைத்துக்கொண்டு வருவோம். இன்று இந்த வாவியிலே தோணியை வலித்துக்கொள்ளும்போது எனது இதயமும் சேர்ந்து வலிக்கிறதடா!



ஆற்றிலே நாம் கதைத்தவை ஆற்றோடு போகாமல் அவற்றை அபார சாதனைகளாக்கக் காத்திருக்கிறேன்... கொஞ்சம் பொறு!

இதனை எழுதிய மாவீரன் கப்டன் கரன், இதே இடத்தில், ஒரு சுற்றிவளைப்பில் அகப்பட்டு 10-11-1986 அன்று வீரச்சாவடைந்தார்.

www.eelamview.com

# இரண்டாவது பனிப்போர்

## அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்திற்கும் இஸ்லாமிய உலகத்திற்கும் இடையில்?

**"தொட்டிலில் கிடக்கும் ஒரு முஸ்லிம் குழந்தை சிணுங்கும் போதும் மேற்குலக நாடுகளின் அழிவைப் பற்றித்தான் அது பேசுகின்றது"**

*'பற்றிக்புசான்' - ஜனநாயகக் கட்சியின் அபேட்சகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷுடன் போட்டியிட்டவர்.*

**"அமெரிக்க மற்றும் மேற்குநாடுகளின் நலன்களுக்கு எதிரான உண்மையான எதிரி இஸ்லாமிய அடிப்படைவாதிகள்தான். இவர்களின் அதிகார எழுச்சிகள் - அது எங்கு நடந்தாலும் எப்பொழுது நடந்தாலும் - அமெரிக்காவுக்கும் அதன் நேசநாடுகளுக்கும் தீங்கையே இழைத்து வருகின்றன."**

*'டானியல் பைப்ஸ்' - அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை ஆய்வுப்பிரிவின் இயக்குநர்.*

**"இஸ்லாமிய தீவிரவாதத்தை ஐரோப்பாக் கண்டத்தினுள் கொண்டு செல்லும் ஒரு வாகனத்தைப் போலவே, பொஸ்னியாவை மத்திய கிழக்கிலுள்ள இஸ்லாமியத் தலைமை கருதுகின்றது."**

*அமெரிக்க நாடாளுமன்ற குடியரசுக் கட்சியினரின் ஆய்வுக் கழகம் வெளியிட்ட (செப் - 1992) ஒரு அறிக்கை.*

**"செவ்விந்திய மக்களைப் போல பிரான்சு நாட்டு மக்களும் அழிந்துபடுவதை [இஸ்லாமிய ஆக்கிரமிப்பால்] நான் விரும்பவில்லை."**

*'ஜீன்மாறிலீபென்' - பிரான்ஸ் நாட்டின் தீவிர வலதுசாரித் தலைவர்.*

சோவியத் சாம்ராச்சியத்தின் சிதைவுக்குப் பின்னர், அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் முதலாவது எதிரியாக இஸ்லாமிய அடிப்படைவாதம் மேலெழுந்துவிட்டது. இதை மேற்குறித்த வாக்கியங்களும், அதைக் கூறியவர்களின் அரசியல் அந்தஸ்துக்களும் வெளிப்படையாகக் காட்டுகின்றன.

கொம்யூனிச பூதத்தின் சாவுக்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பிசாசு தங்களை விழுங்கவருவதாக, மேற்குலகம் கருதுகின்றது.

☆ இந்த இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு மேற்குலகம் ஏன் அஞ்சி நடுங்குகின்றது?

☆ இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் நோக்கமென்ன?

☆ மேற்குலக படைபலத்திற்கும் ஆற்றலுக்கும் சவால் விடக்கூடிய அளவுக்கு இஸ்லாமிய உலகம் பலம்வாய்ந்ததா?

இக்கேள்விகளுக்குரிய விடைகளிற்கு வழிகாட்டுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்

சுமார் 550 கோடி மக்களைக் கொண்ட உலக சனத்தொகையில் - மத அடிப்படையில்- 100 கோடி மக்கள் முஸ்லிம்களாவர்.

ஐ. நா சபையால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தம் 172 நாடுகளில் 26 நாடுகள் முஸ்லிம் நாடுகளாகும். இந்த நாடுகளில் மிகப்பெரும்பாலானவை ஒரு தொடரான நிலப்பரப்பில் அமைந்துள்ளன. ஆபிரிக்க கண்டத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து மத்தியகிழக்கு ஊடாக பாகிஸ்தான்வரை, ஒரு பெரும் நிலப்பரப்பில் இந்த இஸ்லாமிய உலகம் விரிந்து - பரந்து கிடக்கின்றது.

இஸ்லாமிய மக்கள் 'சியா', 'சுனி' என இரண்டு பிரிவுகளாக விளங்குகின்றனர். கடவுள் ஒன்றுதான் - அல்லா - என்று கூறுகின்றது இஸ்லாம். 'அல்லாஹு அக்பர்' (அல்லாவே பெரியவன்; எல்லாமே அல்லாதான்) என்பது அவர்களது சக்திமிக்க ஒரு பொதுக்கோஷம்.

காலத்திற்குக் காலம் அல்லா தனது நபிகளை (தூதர்கள்) பூவுலகிற்கு அனுப்பி மக்களை இரட்சிக்கின்றார் என்கிறது இஸ்லாம். அவ்விதம் மூன்று நபிகள் பூமிக்கு அனுப்பப்பட்டதாக அது கூறுகின்றது. முதலில் மூசாநபியும் பின்னர் ஈசாநபியும் இறுதியாக முகமதுநபியும் அனுப்பப்பட்டதாக இஸ்லாம் சொல்கிறது. இதில் மூசாநபி என்பது யூதர்களின் தெய்வமான மோசசையும், ஈசாநபி என்பது இயேசுகிறிஸ்துநாதரையும் குறிப்பிடுகின்றது இறுதித் தூதுவரான முகமது நபியே அல்லாவால் அருளப்பட்ட 'புனித குர்ரானை' பூமிக்கு இறக்கியவர் (எழுதியவரல்ல) என, இஸ்லாம் கூறுகின்றது.

சியா முஸ்லிம் பிரிவினர் இப்புனித குர்ரானை அப்படியே பின்பற்றுபவர்களாக - தீவிர பழைமை பேணிகளாக - இருக்கின்றனர். இவர்களிடம் சக்திமிக்க ஒரு மதத் தலைமை உண்டு. இறுக்கமான கட்டுப்பாடுகள், சட்டதிட்டங்கள் உண்டு. இவர்களுடைய மதத்தலைவர் 'இமாம்' என அழைக்கப்படுவார்.

சுனி முஸ்லிம்கள் சிறியசிறிய சீர்திருத்தங்களுடன் புனித குர்ரானைப் பின்பற்றுகின்றனர் இவர்களிடம் ஒரு பொது மதத்தலைவர் இல்லை. மதக்கட்டுப்பாடுகளும் சியா பிரிவினரைப் போல மிகக் கடுமையாக இல்லை.

உலக இஸ்லாமிய சனத்தொகையில் 'சுனி' முஸ்லிம்கள் 89 வீதத்தினராகவும் 'சியா' முஸ்லிம்கள் 10 வீதத்தினராகவும் இருக்கின்றனர். ஈரானில் மட்டும்தான் சியா முஸ்லிம்கள் மிகப் பெரும்பான்மையாக வாழுகின்றனர்.

ஆனாலும் மேற்குலகம் தற்போது மிரட்சியுடன் நோக்கும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் எழுச்சி, உலக முஸ்லிம்களில் சிறுபான்மையினரின் நாடாகிய ஈரானிலிருந்தே எழுந்து- விரிந்து வருகின்றது

**எழுச்சிபெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாத்தின் பெயரால் முஸ்லிம் நாடுகளையெல்லாம் ஒன்றிணைக்கும்போது, பலம் வாய்ந்த இஸ்லாமிய உலகொன்று உருவாகலாம்; அதில் பலம்வாய்ந்த இஸ்லாமியப் படை ஒன்றும் உருவாகலாம்.**

இஸ்லாத்தினதும் - இஸ்லாமியர்களினதும் புனிதத்தை மீட்டெடுப்பதும், பாதுகாப்பதும்தான் இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் பிரதான இலக்கு என, அவர்கள் சொல்கிறார்கள்.

## உலகவலம்

நீண்ட நெடுங்காலமாக மேற்குலகின் கலாசார பழக்கவழக்கங்கள் மற்றும் மேற்குலக சித்தாந்த கருத்து ஆதிக்கங்கள் இஸ்லாமிய உலகிலே புகுந்துள்ளதால் இஸ்லாமிய சமூகம் மாசடைந்து வருவதாக, இஸ்லாமிய அடிப்படைவாதிகள் குற்றம் சுமத்துகின்றனர். இதைத் தடுத்து நிறுத்தி இஸ்லாத்தின் புனிதத்தையும், இஸ்லாமியர்களின் தனித்துவத்தையும் பேணுவதற்காக புனித குர்ரான் சொல்லும் வழிமுறையில் இஸ்லாமியர்கள் ஒழுகவேண்டுமெனவும், இவர்கள் வலியுறுத்துகின்றனர். இதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக இஸ்லாமிய நாடுகளின் ஆட்சி அதிகாரங்களை இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கையேற்க வேண்டுமென, அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

இப்புனித முயற்சிக்கெதிரே எது தடையாக இருக்கின்றதோ - அது இஸ்லாமிய நாட்டிற்குள் இருந்தாலும் சரிதான் வெளி உலகில் இருந்தாலும் சரிதான் - அதற்கெதிராக புனிதப்போரை (ஜிகாத்) தொடுத்து. இறுதி வெற்றிவரை போர் செய்ய வேண்டுமென, இஸ்லாமிய தீவிரவாதிகள் பிரகடனம் செய்கின்றனர்.

முன்னர் ஈரான் அமெரிக்க சார்பு பொம்மை ஆட்சியாளர்களால் ஆளப்பட்டபோது, மேற்குலக கலாசாரங்களான இரவு நடனவிடுதிகள், மதுபான நிலையங்கள், விபசாரவிடுதிகள், மற்றும் பாலியல் களியாட்டங்கள் என்பன அங்கே மலிந்திருந்தன. இதனால் இஸ்லாமிய கலாசாரம் மாசுபடுத்தப்பட்டதுடன் ஈரானிய தேசத்தை அப்போதைய ஆட்சியாளர்கள் அமெரிக்காவுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்கள் என்றும் குற்றம் சாட்டிக்கொண்டு, ஈரானிய மதத்தலைவரான இமாம் கொமேனியின் கீழ் ஈரானிய மக்கள் அணிதிரண்டனர். ஈரானில் ஒரு யுகப்புரட்சி நடந்து முடிந்தது. மிகவும் கட்டுப்பாடான மதவிதிகளைக் கடைப்பிடிக்கும் மதத்தலைவரான இமாம் கொமேனி ஆட்சித் தலைவரானார். இஸ்லாமிய மரபுவாதம் ஆட்சி விதியாக மாறியது. அத்துடன் இந்த இஸ்லாமியப் புரட்சி மற்றைய முஸ்லிம் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அங்கெல்லாம் அது ஊழிக்காற்றாகச் சுழன்றடித்தபடியுள்ளது

இஸ்லாமிய நாடுகள் மத்தியில் எழுச்சி கொண்டுவரும் இந்த இஸ்லாமிய தீவிரவாதம் அபாயம் நிறைந்தது என மேற்குலகம் கருதுவதற்கு, ஏராளமான காரணங்களுண்டு.

இந்த இஸ்லாமிய அடிப்படைவாதம் முன்னர் கூறியதைப் போல அதன் கருவிலேயே மேற்குலக எதிர்ப்பைக் கொண்டுள்ளது. அரசியல் புரட்சியாக மாறிவரும் இந்த இஸ்லாமிய தீவிரவாதத்தின் எழுச்சி மேலும்மேலும் பரவுமானால், முஸ்லிம் நாடுகளின் ஆட்சிப்பீடம் காலகதியில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கைகளுக்கே சென்றடையலாம் என, மேற்குலகம் அஞ்சுகின்றது. அப்படி நிகழ்ந்தால் அது அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கு ஒரு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என்பது, பொதுவான கருத்து.

ஏனெனில் மேற்குலகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பது எண்ணெய். இது பரந்த இஸ்லாமிய உலகிலேயே பெருமளவு கிடைக்கின்றது. இந்த எண்ணெய் மேற்குலகத்திற் கெதிரான ஒரு ஆயுதமாக மாற்றப்படும் அளவுக்கு முஸ்லிம் நாடுகள் ஒன்றுபடுமானால், அது மேற்குலகின் வீழ்ச்சிக்குத்தான் கட்டியம் கூறும்.

அத்துடன் இஸ்லாமிய நாடுகள் இராணுவ ரீதியாக ஒரு குடையின் கீழ் அணிதிரளக் கூடிய அளவுக்கு, சில அடிப்படைகளையும் கொண்டிருக்கின்றன.

**கொம்யூனிசப் பூதத்தின் சாவுக்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற பிசாசு தம்மை விழுங்கவருவதாக, மேற்குலகம் அஞ்சுகின்றது.**

அதாவது இனரீதியாக, மதப்பிரிவுரீதியாக, அரசியல்ரீதியாக பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் பெரும்பாலான முஸ்லிம் நாடுகள் (உலகின் மிகப் பெரிய முஸ்லிம் நாடான இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகள் இதற்குள் அடங்கவில்லை) ஒரு பொது (தொடர்) நிலப்பரப்பில் அமைந்துள்ளன. எழுச்சிபெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படை

(11 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# அழியாத ஒன்று!

"இப்போது பூமியில் இலை தழைகள் முளைக்கின்றனவா?"

இது வெள்ளாடு எழுப்பிய கேள்வி.

"புற்தரைகள் இன்னும் பூமியில் இருக்கின்றனவா?"

இது செம்மறியின் சந்தேகம்.

"இவற்றையெல்லாம் நாங்கள் முற்றாக மேய்ந்து அழித்துக் கொண்டல்லவா இருந்தோம்? "

தாங்கள் இப்போது இருப்பது எங்கு? உலகை விட்டு - உடலைவிட்டு - தாம் வந்தது எவ்வாறு என்பதை விளங்காத மயங்கு நிலையிலிருந்த அந்த வெள்ளாடும் செம்மறியும் எழுப்பிய கேள்விகளுக்கு -

பதில் எதுவும் கிடைக்கவில்லை! காலம் இவற்றைப் பொருட்படுத்தாது ஓடிக்கொண்டிருந்தது!

"அந்த யூத இனம் அழியத்தான் வேண்டும். அவர்களைக் கோடிக்கணக்கில் கொன்று குவிப்போம்! முடிப்போம்! - நாம் அரசாள வந்த எசமான இனம்!" என ஜேர்மனியில் கட்டவிழ்த்து நின்ற கொடியன் ஹிட்லரின் குரல் வலுவிழந்து மங்கலாய் வேறெங்கோ மறைந்தது! அதனை அறிவதற்கு அவன் இல்லை. அவன் என்ன ஆனான் என்பதையும் கணக்கெடுக்காது காலம் ஓடிக்கொண்டிருந்தது.

"என்னுடன் எவரும் மோத முடியாது. நான் அரச படைகளை ஆளும் அமைச்சர்! தமிழரை மட்டுமல்லாது, எதிர்த்து வரும் எம் சிங்கள இளைஞரையும் பல்லாயிரக் கணக்கில் நான் கொன்று முடிப்பேன்" எனக் கொக்கரித்து நின்ற அந்தக் 'கஞ்சனும்' இன்றில்லை!

இவை அனைத்தையும் கடந்து காலம் ஓடிக்கொண்டிருந்தது!

மிகத் தூரத்தில், பூமியில், நாயொன்று குரைத்துக் கொண்டிருந்தது.

இன்னொரு இடத்தில் புடையன் பாம்பொன்று சத்தம் எதுவுமின்றி சருகுகளின் இடையே மறைந்துகொண்டிருந்தது.

இவற்றையும் கவனியாது காலம் ஓடிக்கொண்டிருந்தது!

அதே மண்ணுலகில் இன்னொன்றும் நடந்துகொண்டிருந்தது -

மேடையில் மனித நா ஒன்று பேசிக்கொண்டிருந்தது! மிக நயமான உரைகளை அது ஆற்றிக்கொண்டிருந்தது!

"நாங்கள் மனிதகுலம். அகிம்சை எங்கள் மதம். அன்பைக் கடைப்பிடிப்போம். அனைவரையும் அரவணைப்போம்" என அந்த - அரசியற் பெருமகனின் - பொய்மை நாதன் குரலை எழுப்பிக்கொண்டிருந்தது!

- இங்குதான் ஒரு அதிசயம் நடந்தது.

என்ன?

எதற்கும் அசையாத காலப் பெருவலு ஒருகணம் கண் சிமிட்டிச் சிரித்தது!

என்ன அதிசயம், அல்லது அக்கிரமமா?

மேடை மின்னெலாய் மறைந்தது! அங்கிருந்த மனிதர்களும் தான்! கறைபடிந்த நிலத்தை மேலும் கறையாக்கியபடி சில துண்டங்கள் கிடந்தன!

மனிதக் கூக்குரல்கள், குற்றச்சாட்டுகள் பறந்தன!

ஆனால் இவை எவையும் நடைபெறாதது போல காலம் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தது!

"நீ காலம் அல்ல, கா..ல..ன்! எதையும் அழிப்பவன்" என அதனைக் கீழிருந்த குரலொன்று சபித்தது.

"இல்லவே இல்லை! காலம் ஒரு கருவி மட்டுமே. தவறாது அழிப்பதும் ஆக்குவதும் நான்!"

இவ்விதம் பெரும் குரலொன்று முழங்கிற்று.

சபித்துநின்ற சிறு குரல் திகைத்தது! விடை எங்கிருந்து எழுந்தது? விளங்காத தடுமாற்றம்...! மீண்டும் அந்த எட்டாத குரலின் அழுத்தம் நெஞ்சத்தில் விழ்ந்தது!

"விளங்கிக் கொள்ளுங்கள். வலிமை, திறமை மட்டும் பலியாது! நேர்மையும் அவசியம்! உன் செயலால் எழும் விளைவு உனக்கே! இதில் நான் தவறு விடேன்...!"

"நீ யார்? நின் பெயர் என்ன?" என இரக்க முனைந்தது சிறிசு!

"அறம்!"

இந்த ஓர் இறுதிச் சொல்லுடன் அனைத்தும் நின்றன.

— நாக. பத்மநாதன்

# இரண்டாவது...

வாதம் இந்த நாடுகளிலெல்லாம் ஆதிக்கம் பெறுமானால், இந்த முரண்பாடுகளையெல்லாம் களைந்து, இஸ்லாத்தின் பெயரால் அந்த நாடுகளை ஒன்றிணைக்க முயலும். அப்படி நடந்தால் பலம்வாய்ந்த இஸ்லாமிய உலகொன்று உருவாகும். அதில் பலம் வாய்ந்த இஸ்லாமிய படையொன்று உருவாகும்.

இது நடைமுறைச் சாத்தியமற்றது என்று கூறப்படும் வாதத்திற்கு அமெரிக்கா ஒருபோதும் செவிமடுக்கமாட்டாது. ஏனெனில் இது தொடர்பாக சில அனுபவங்களையும் — அச்சங்களையும் அமெரிக்கா கொண்டிருக்கின்றது.

வளைகுடா போரின் பின் ஈராக்கிற்கெதிராக ஐ. நா. விதித்த எண்ணெய் ஏற்றுமதித்தடையை ஈரானின் உதவியுடன் சதாம்குசேன் உடைத்து வருகின்றார் அதாவது ஈராக்கிற்கு வெளியே அதன் எண்ணெய் போகாதவாறு பன்னாட்டுப்படைக் கப்பல்கள் வளைகுடாக் கடலுக்குள் ஒரு முற்றுகையை இட்டுள்ளன. ஆனால் ஈராக்கின் தரை எல்லை வழியாக ஈரானுக்குள் கொண்டு செல்லப்படும் எண்ணெய்யை அங்கிருந்து ஏற்றுமதி செய்ய ஈரான் வழிசமைத்துக் கொடுத்துள்ளது. இது அமெரிக்காவைக் கோபத்திற்கும் அதேசமயம் ஆச்சரியத்திற்கும் ஆழ்த்தியிருக்கின்றது. ஏனெனில் எலியும் பூனையும் போல பகைமைச் சக்திகளாகவே இவ்விரு நாடுகளும் இருந்துவருகின்றன. சில வருடங்களுக்கு முன்னர்தான் இருபக்கத்திற்கும் பேரழிவை ஏற்படுத்திய ஒரு யுத்தம் முடிந்தது. இன்றும்கூட இரண்டு நாடுகளினதும் போர்க்கைதிகள் இரண்டு நாடுகளிலும் உள்ளனர். அப்படியிருக்க திடீரென மேற்குலகின் தடைகளுக்கும் அழுத்தங்களுக்கும் எதிராக, இஸ்லாத்தின் பேரால் இவ்விரு நாடுகளும் ஏதோ ஒரு வகையில் கூட்டுச் சேர்ந்துள்ளன.

இதேபோன்று, அமெரிக்க பயணிகள் விமானமொன்றுக்கு குண்டு வைத்து 259 இற்கும் மேற்பட்ட பிரயாணிகளைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களை, லிபிய அரசு விசாரணைக்காகத் தரவேண்டும் என்ற மேற்குலகின் அழுத்தத்தை, லிபியா தட்டிக்கழித்துவருகின்றது. இந்தவிடயத்தில் லிபியாவைப் பணிய வைக்கச்செய்ய அரபுநாடுகளின் கூட்டணி முயலவேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையும் எந்தவிதப் பயனையும் அளிக்கவில்லை. இந்தவிடயத்தில் அரபுலகின் மௌன ஆதரவு லிபியாவுக்கே கிடைத்துவருகின்றது.

அதேவேளை இன்னுமொரு புறத்தில் ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் சோவியத்திலிருந்து உதிர்ந்துவிழுந்த சில இஸ்லாமிய நாடுகளையும் ஒன்றிணைத்து ஒரு இஸ்லாமியக் குடியரசொன்று அமைவதற்கான சாத்தியப்பாட்டைப்பற்றி, அமெரிக்க இராஜதந்திரிகள் அச்சங்கொண்டிருக்கின்றனர்.

இவை இப்படியிருக்க, சோவியத்தின் சிதைவுடன் அதன் இராணுவ - அணுவாயுத தொழில்நுட்பம் விலைக்கு வாங்கப்படக்கூடிய ஒன்றாகிவிட்டது. அதுவும் சோவியத்திலிருந்து பிரிந்த சில இஸ்லாமியக்குடியரசுகளில் இத்தகைய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் இருக்கின்றனர். அத்துடன் இக் குடியரசுகளிலிருந்து அணுவாயுதங்கள்கூட சில இஸ்லாமிய அரசுகளால் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன என்றொரு சந்தேகம், மேற்குலகிடம் உண்டு. எல்லாவற்றிற்கும் மகுடம் வைப்பதுபோல உலகப் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும்எண்ணெய்இஸ்லாமிய உலகிடமே நிறைந்திருக்கின்றது.

எனவே, இந்த இஸ்லாமிய உலகம் தன்னை ஒரு பலம் வாய்ந்த சக்தியாக உயர்த்திக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

மறுபுறத்தில் இந்த இஸ்லாமிய உலகம் ஒன்றுபடுவதைத் தடுப்பதிலும் அமெரிக்கா பகீரத முயற்சிகளைச் செய்துவருகின்றது.

இஸ்லாமிய உலகம் அமைந்துள்ள பிராந்தியங்களிலுள்ள முஸ்லிம் விரோத அரசுகளுக்கு இராணுவ உதவிகளை வழங்கி, அவற்றைப் பலப்படுத்தி, முஸ்லிம் நாடுகளுடன் மோதவிடுவதன்மூலம் முஸ்லிம்நாடுகளின் பலம் அதிகரிக்காமல் பார்க்க முயல்கின்றது. இந்தவகையில் மத்திய ஆசியாவில் இஸ்ரேலைப் பயன்படுத்துவதுபோல, தென்ஆசியாவில் இந்தியாவைப் பயன்படுத்த அமெரிக்கா முயற்சித்துக்கொண்டிருக்கின்றது.

அதேவேளை பலம்பெற்றுவரும் முஸ்லிம் நாடுகளை அருகிலுள்ள முஸ்லிம் நாடுகளுடன் மோதவைத்து, அவற்றின் பலத்தைச் சிதைக்க முயல்கின்றது அல்லது பல காரணங்களைக் கூறிக்கொண்டு அதன் மீது போர்தொடுத்து அழிக்க முயல்கின்றது அல்லது பொருளாதாரத் தடைகளை விதித்து பலவீனமாக்குகின்றது.

இவ்விதம் மேற்குலகிற்கும் இஸ்லாமிய உலகிற்கும் இடையே முறுகல் நிலை அதிகரித்து வருகின்றது.

இது 'இரண்டாவது பனிப்போர்' என அழைக்கப்படும் அளவுக்கு வளர்ந்து செல்கின்றது.

பொஸ்னிய முஸ்லிம்கள் சேர்பியர்களால் இனப்படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்குலகம் எடுக்காததற்கு, இந்தப் பனிப்போர் பிரதான காரணியாக இருக்கின்றது.

பொஸ்னிய விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதுபோல அமெரிக்க - மற்றும் மேற்குலக ஆட்சிபீடங்கள் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அந்த மக்களுக்கெதிராகவே மேற்குலக அரசுகள் நடந்து வருகின்றன.

இனஅழிப்பிலிருந்து தங்களைத்தாங்களே பாதுகாப்பதற்காக பொஸ்னியர்கள் ஆயுதம் ஏந்துவதை அமெரிக்கா தடுக்கின்ற அதேவேளை, சேர்பியர்களுக்கு ஆயுதங்களை விற்கும் ரஷ்யாவின் விருப்பத்தை மறைமுகமாக அங்கீகரித்து பொஸ்னிய முஸ்லிம்களின் இன அழிவுக்கு உதவுகின்றது.

சுருக்கமாகச் சொன்னால், முன்னர் சோசலிச நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் என்னமாதிரி கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டதோ அதேபோன்று இப்போது, இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும் அதற்குச்சார்பான அரசுகளுக்கும் - அமைப்புகளுக்கும் எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதேவேளை, சந்தர்ப்பம் ஏற்படும்போது தனது படைபலத்தையும் பிரயோகித்து அவற்றை நசுக்கவும் முயல்கின்றது.

ஆனாலும் மேற்குலக படைபலத்தின் இரைச்சலுக்குச் சவால்விட்டபடி, இஸ்லாமிய அடிப்படைவாதம் முஸ்லிம் நாடுகளில் பரவிவருகின்றது.

# புதைந்து கிடக்கும்...

மின் கம்பம் நாட்ட குழிதோண்டும் போதுதான் - இந்த - இவ்வளவு காலமும் புதைந்த ஓர் உண்மை புலனாகியது.

எமது மண்ணில் பல இடங்களில் முகாமிட்டிருந்த இந்திய இராணுவத்தினர், பல சுற்றிவளைப்புக்களைச் செய்து பலரைக் கைது செய்தனர். சிலரை விடுவித்தனர். சிலரை இந்த மண்ணிற்குள் மறைத்தனர்.

வன்னிப்பகுதியில் காட்டுப்பாதை வழியே பஸ்சில் பயணம் செய்துகொண்டிருந்த இளம்பெண்களை விசாரணை என்ற பெயரில் துரோகக் கும்பல்களின் துணையுடன் வாகனத்திலிருந்து இறக்கினர். பின்னர் அவர்களின் உறவினர்கள் விசாரிக்கும் போது 'விடுதலை செய்துவிட்டோம்' என்றனர். ஆம், அவர்களை வாழ்க்கைப்பயணத்திலிருந்து விடுவித்து மண்ணுள் புதைத்து விட்டனர்.

இப்படி அந்த இந்திய ஆக்கிரமிப்பாளர்கள் குழிதோண்டிப் புதைத்த கணக்கற்ற மனிதப் படுகொலைகளில் இன்று இது வெட்டவெளிச்சமாகியுள்ளது. இவ்விதம் கொல்லப்பட்ட இந்த மண்ணின் மைந்தர்களுள் எத்தனை பேர் எலும்புக்கூடுகளாக புதையுண்டு கிடக்கின்றார்களோ தெரியவில்லை.

'வெற்றுடல்கள் அல்ல — இவைகள் வெடிமருந்துப் பொதிகள்' என்ற, கப்டன் கஸ்தூரி எழுதிய ஒரு கவிதை வரிதான் ஞாபகம் வருகின்றது.

— முகுந்தன்

www.eelamview.com

# பிரேமதாசாவின் உண்மை முகம்

## 1580 நாட்கள் ஆட்சியில் ஒரு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்

பிரேமதாசா மக்கள் தலைவர். உண்மையான பௌத்தர் சமாதானத்தில் நாட்டமுள்ளவர். ஏழை மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர் என்றெல்லாம் கூறப்படுகின்றது. இதைப் பலரும் நம்பத்தான் செய்கின்றார்கள்.

பிரேமதாசாவை எம் நேரடி பட்டறிவின் மூலம் அடையாளம் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம். இது முழுமையாக அமையாது எனினும் ஓரளவு சரியாக அடையாளம் காண உதவும் என நம்புகிறேன்.

நாம் சிறீலங்கா அரசோடு பேசிய காலம், பிரேமதாசா எம்மை கம்உதாவ பார்ப்பதற்காக மகியங்கணைக்கு அழைத்திருந்தார்.

மிகவும் பின்தங்கிய பகுதி அது. அங்கு வழமைபோல் வீடுகள், மருத்துவமனை, பாடசாலை, தபாற்கந்தோர் என எல்லாமே புதிதாக அமைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கில் மக்கள் கம்உதாவ நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்தவண்ணம் இருந்தனர்.

''கொழும்பு -7 இல் இருப்பவர்களுக்கு இம்மக்களைப்பற்றி என்ன தெரியும்? இங்கு மின்சாரம் இல்லை, மருத்துவமனை இல்லை. பாடசாலை இல்லை. பலரிடம் வானொலிப் பெட்டிகூட கிடையாது. எந்த வசதியுமே இல்லை. இந்த மக்களைப்பற்றி அவர்களுக்குப் புரியாது'' எனப் பிரேமதாசா எமக்கு விளக்கினார்.

இயல்பாக உயர்குழாத்தின்மீது அவருக்கு இருந்த வெறுப்பை வெளிப்படுத்தினார்.

''மகியங்கணைக்கு புத்தர் ஒருமுறை வந்திருந்தார்'' என, புத்தரின் வருகை பற்றிய கதையைக் கூறினார். பழைய மரபுக் கதைகள் உண்மையற்றவை என்பது பிரேமதாசாவுக்குத் தெரியாமல் இருந்திருக்காது.

பழைய மரபுக் கதைகளை அப்படியே ஏற்பதன்மூலம் அவர்மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் சிஙகள மேலாதிக்க உணர்வைத் தனைை அறியாமலேயே வெளிப்படுத்தினார்.

''இங்குள்ள மக்கள் அமைதியை விரும்புகின்றார்கள் வடக்கு உங்களுடையதுதான்; கிழக்குத்தான் சிக்கல். நாம் சமாதானமாக இருந்தால் அடுத்த தேர்தலில் எம்மை யாரும் அசைக்க முடியாது'' என்ற கருத்துப்பட பல தடவை கூறினார்.

அவருடைய மிகப் பெரிய குறிக்கோளே தேர்தலில் வெல்வதுதான் என்பதை, சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தார்.

தனிப்பட்ட முறையில் நேரடியாக பிரேமதாசா மீது அழுத்தம் போடப்பட்டால் எதிர் விளைவுகளை ஆராயாமல் அவ் அழுத்தத்தை எதிர்க்கும் பண்பு அவரிடம் இருந்தது.

ஆசியாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி 'சோலசு' பிரேமதாசாவிடம், இசுரேல் பிரதிநிதிகளை இலங்கைத் தீவில் இருந்து வெளியேற்றினால் அமெரிக்க உதவிகள் கிடையாமல் போகலாம் என மறைமுகமாக மிரட்டிய போது, ''எமக்கு அமெரிக்க உதவி தேவையில்லை'' என அவருக்குத் தான் கூறியதாக பிரேமதாசா எம்மிடம் ஒருமுறை எமது சந்திப்பின்போது கூறினார்.

அதேபோல் பிரித்தானிய தூதர் 'கிலாட்சுரோன்' பிரேமதாசா மீது மனித உரிமைகள், தேர்தல் சீர்கேடு என அழுத்தம் போட முயன்றபோது, நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

இச்செயல்கள் பிரேமதாசா தான் செய்ய நினைக்கும் செயல்களுக்குக் குறுக்கே வரும் மேற்குலக அழுத்தங்கள் தார்மீகங்களுக்கு எத்தகைய மதிப்பை அளிப்பார் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பிரேமதாசா எளிமையானவர், மிகவும் பண்புள்ளவர், மிகுந்த கட்டுப்பாடுடையவர், கடுமையான உழைப்பாளி என்று கூறப்படுவதில் உண்மையில்லாமலில்லை. இங்கே தனிமனிதரான பிரேமதாசாவுக்கும் ஆட்சியில் சனாதிபதியாக இருக்கும் பிரேமதாசாவுக்கும் இருக்கும் வேறுபாட்டை, நாம் புரிந்துகொள்ளல் வேண்டும்.

தனிப்பட்ட முறையில் பிரேமதாசா எளிமையானவரும் மிகுந்த பண்பாளருமே என்பதை மறுக்க விரும்பவில்லை.

பிரேமதாசாவுக்கு உயர்குழாத்தின் மீது வெறுப்பிருந்தது; ஆனால் அவர்கள் ஆட்சிமுறையின்மேல் பெரும் விருப்பிருந்தது.

இதுதான் அடிப்படை முரண்பாடு.

உயர்குழாத்தை ஆட்டம் காணச் செய்ய பாமரமக்களின் பலம் அவருக்குத் தேவைப்பட்டது.

எனவே அவர்களுக்காக உழைப்பவர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினார்.

சிலவேளைகளில் அவர்களுக்காக உழைக்க வேண்டும் என எண்ணியிருந்தாலும்கூட, தான் செயற்படுத்தும் திட்டங்கள் அவர்களுடைய வாழ்க்கை முறையை மாற்றாது என்பது, பிரேமதாசாவுக்குத் தெரியாததல்ல.

அவரைப் பொறுத்தவரை தமது ஆட்சிக் காலம் முடியும் வரை தாம் பலமாக இருப்பதே போதுமானதாக இருந்தது.

உண்மையில் பாமர மக்களின் தலைவராக பிரேமதாசா இருந்திருந்தால், உயர்குழாத்தின் ஆட்சி அதிகாரங்களை உடைத்தெறிந்திருக்க வேண்டும்.

அடிப்படை மாற்றத்தை விரும்பி நின்றது மக்கள் விடுதலை முன்னணி. அதன் தலைமை சரியான முறையில் நடக்கவில்லை என்ற போதும் அதனோடு இணைந்து நின்றவர்கள், இத்தீவில் மாபெரும் புரட்சிகர மாற்றத்தை வேண்டி நின்றனர்.

இங்கே உயர்குழாத்தின் ஆட்சிக் கரங்களைப் பலப்படுத்த சாதாரண மக்களின் உரிமைக்குரலை அழித்தவர்களில் முதன்மையானவர் பிரேமதாசா என்பதை, யாரும் மறந்துவிடக்கூடாது.

தான் ஆட்சிக்கு வரும் வரை அவர்கள் குறித்து மென்போக்கைக் கடைப்பிடித்த பிரேமதாசா, தன் ஆட்சிக்கு அவர்களால் ஆபத்து என்றதும் அவர்களை ஈன இரக்கம் இன்றி அழித்தொழித்தார்.

பிரேமதாசாவின் செயற்பாட்டுக்குக் குறுக்கே மேலை நாட்டினரின் அழுத்தங்கள் பயன்தராது என்பதை முன்பே பார்த்தோம்.

தமது தலைவர் ஆட்சியில் எல்லாம் மாறப் போகின்றது என, பல மக்கள் நம்பினர். அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் போதே அவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த எழுந்த புரட்சிகர சக்திகள் பெரிய அளவில் நசுக்கப்பட்டன.

பிரேமதாசாவை நம்பிய மக்களில் 60,000 இற்கும் மேற்பட்டோர் அவர் ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டனர்.

முடிவில் உயர்குழாத்தின் ஆட்சிக்கரங்களை மிகவும் பலப்படுத்தினார்.

பௌத்தத்தை, பௌத்த சங்கத்தை மீண்டும் அரியாசனத்தில் ஏற்ற வேண்டும் என்பதில் பிரேமதாசா கடுமையாக உழைத்தார் அது 'புத்த காயா' வரை சென்றது.

பௌத்தத்தின், பௌத்த சங்கத்தின் மறுமலர்ச்சி என்பது சிங்கள பேரினவாதத்தின் மறுமலர்ச்சி. இலங்கைத்தீவு புத்தரால் சிங்களவர்களுக்கு எனத் தரப்பட்ட புனித பூமி என்ற கோட்பாட்டின் மறுமலர்ச்சி என்பதை, பலர் அடையாளம் காணத் தவறினர்.

அமைதி, சமாதானம் எனக் கூறிக்கொண்டே இத்தீவின் அமைதியும் சமாதானமும் அழிந்து போகக் காரணமான சிங்களப் பேரினவாதம் கட்டி எழுப்பப்பட்டது.

மக்கள் சொர்க்க வாசலை மேலே பார்த்துக் கொண்டிருக்க காலுக்குக் கீழே நரகக் குழிகள் வெட்டப்பட்டன.

21 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தில் தமிழீழம் மிகப்பெரிய அழிவுகளை பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்திலேயே சந்தித்தது.

மக்கள் விடுதலை முன்னணியை அழித்துச் சுவை கண்ட பிரேமதாசா, தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் ரயர் போட்டுக் கொளுத்த முயன்றார்.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளில் 20,000இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொல்லப்பட்டனர்.

தமிழீழத்தில் வாழும் தமிழ் மக்கள் தொகையில் அரைவாசிக்கு மேல் - பத்து இலட்சம் மக்கள் - ஏதிலிகள் ஆனார்கள்.

ஆயிரக் கணக்கில் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

குண்டு வீச்சால் இறந்தோர் ஆயிரம் எனில் மருத்துவம், உணவு, போக்குவரத்து வசதியின்றி மறைமுகமாக இறந்தோர் பத்தாயிரமாகும்.

இந்த பத்தாயிரம் மக்களின் இறப்பு யாருக்கும் தெரியாமல் நடந்தது.

மூன்று ஆண்டுகளாக அடிப்படைத் தேவைகளான உணவு, மருத்துவம், போக்குவரத்துக்கு நேரடியாகத் தடையும் மறைமுகமாக பல தடைகளும் நடைமுறையில் இருக்கின்றன.

இத்தனை அழிவுகளுக்குப் பின்பும் பிரேமதாசா தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு நண்பர் எனக் காட்டப்பட்டார்.

1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டன. பிரேமதாசாவினால் சமாதானம், தீர்வு என்பதன் பெயரால் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இத்தற்காலிக இணைப்பையும் பிரிக்கவே முயல்கிறது.

அமைதியை எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழர்களின் இதயம் அவர்கள் அறியாமலேயே அறுக்கப்பட்டது.

இது பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் தான் நடந்தது.

பௌத்த பேரினவாதத்தை வளர்த்த தற்கால மகாநாமவை (மகாவம்சத்தை எழுதியவர்) இத்தீவு இனங்காணத் தவறியது.

தமக்கே கோடரிக்காம்பாக மாறிய தம் தலைவரை சிங்களப் பாமரமக்கள் இனங்காணத் தவறினர்.

அமைதி, சமாதானம் எனப் பேசிக்கொண்டே தமிழ் மக்களைப் பெருமளவில் அழித்து - தமிழர் தாயகத்தைச் சிதைத்த சிங்களத் தலைவர் பிரேமதாசா என்பதை, தமிழர்கள் இனங்காணத் தவறினர்.

**எல்லாவற்றிற்கும் மேலாக பிரேமதாசாவின் 1580 நாட்கள் ஆட்சிக் காலத்தில்தான் (நான்கு ஆண்டுகால) இத்தீவில் வாழும் சிங்கள, தமிழ் மக்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் (100,000) நேரடியாகவும் மறைமுகமாகவும் கொல்லப்பட்டனர் என்பதை, பெரும்பாலோர் தெரிந்துகொள்ளவில்லை!**

— யோகி ○



## தேசிய மட்டத்தில் பரிசு பெற்ற செஞ்சோலை மாணவி

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் 1993 ஆம் ஆண்டு அன்னை பூபதி நினைவாக, நடாத்தப்பட்ட பொது அறிவுத் தேர்வில் 'செஞ்சோலை' பாடசாலையைச் சேர்ந்த மாணவி செல்வி சஞ்சிகா கந்தையா, ஆண்டு - 7 இல் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கப் பரிசைப் பெற்றார்.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com